Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 32 (04.06.2003) புதன்கிழமை இதழ்: 243

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ   MADRAS CEMENTS LTD   RAMCO CEMENT சீமேந்து   ரா ம் கோ

(சி-884)

# அரசாங்கம் உரிய பதிலைத் தராததால் ரோக்கியோ செல்லப் போவதில்லை!

## யாழ்.பிரமுகர்களுடனான சந்திப்பில் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**"வடக்கு - கிழக்கில் அதிகாரமுள்ள நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான எமது யோசனைக்கு, இலங்கை அரசு உரிய பதில் எதுவும் இதுவரை எமக்குத் தரவில்லை. இந்த நிலையில், ரோக்கியோ மாநாட்டில் நாம் பங்குபற்றுவதால் தமிழ் மக்களுக்கு எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. எனவே - நாம் அம்மாநாட்டில் பங்குபற்றுவதில்லை எனத் தீர்மானித்துள்ளோம்"**

**- இவ்வாறு, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற முக்கிய பிரமுகர்களைச் சந்தித்தபோது நேற்றுத் தெரிவித்தார்.**

நேற்றுக்காலை - கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறைச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலிருந்து சென்ற முக்கிய பிரமுகர்கள், சுமார் 30 பேர் வரை கலந்துகொண்ட மேற்படி கூட்டத்தில்- அரசியற்துறைப் பொறுப்பாளர், புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

அங்கு அவர் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும், சமகால அரசியல் நிலைமை தொடர்பாகவும் விளக்கிக் கூறும்போது பின்வருமாறு தெரிவித்தார்,

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் இதுவரை ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்று

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் கடிதத்துக்கான பதில்; பாலா இன்று அனுப்புகின்றார்!

(கிளிநொச்சி)

அரசு முன்வைத்திருக்கும் வட-கிழக்கு அபிவிருத்திக்கான மாற்று யோசனைகள் தொடர்பாக பிரதமர் ரணில் அனுப்பிய கடிதத்துக்கான விடுதலைப் புலிகளின் பதில், அநேகமாக இன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், இக்கடிதத்தை நோர்வே தூதரகம் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைக்கவுள்ளார்.

## மூன்று நாடுகளின் தூதுவர்கள் இன்று கிளிநொச்சிக்கு விஜயம்!

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து - தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றிப் பேசுவதற்காக- பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, நெதர்தலாந்து தூதுவர்கள், இன்று கிளிநொச்சி செல்கின்றனர்.

இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் வரும் இவர்கள்- உடனடியாகவே தரைவழியே வன்னி செல்கின்றனர்.

இவர்கள் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை - இன்று விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக அமைச்சர் சந்திரசேகரனும் கிளிநொச்சிக்குச் செல்வார் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இவர், நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் தேக்கநிலை பற்றிக் கலந்துரையாடியதைத் தொடர்ந்தே- வன்னி புறப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். முக்கிய பிரமுகர்களுடன் தமிழ்ச்செல்வன் நேற்று சந்திப்பு

### சமகால அரசியல் நிலைவரம் குறித்து விளக்கம்

(கிளிநொச்சி)

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும், உதவி வழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமைக்கான காரணங்கள் குறித்தும் யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும் விடுதலைப் புலிகள் விளக்கமளித்துள்ளனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், செயலகத் திட்டப் பணிப்பாளர், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மற்றும் குடாநாட்டிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், யாழ்.சமூகத்தின் முக்கிய பிரமுகர்களென சுமார் முப்பது பேர் கலந்துகொண்ட கூட்டத்தில் மேற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் செய்தியுடன் ஹக்கீம் ஒஸ்லோவுக்குத் திடீர் பயணம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட செய்தியொன்றை எடுத்துகொண்டு, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஒஸ்லோ புறப்பட்டுச் சென்றார்.

நேற்றுமுன்தினம், மிகவும் இரகசியமான முறையில் இவர் நோர்வே சென்றதாகத் தெரியவருகின்றது.

ஒஸ்லோ புறப்பட முன்னர் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடனும் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ள ஹக்கீம் -

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனை நேற்றுச் சந்தித்துப் பேசியதாகத் தெரியவருகின்றது. இதேவேளை - ஹக்கீம், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம்; ரோக்கியோ மாநாட்டின் பின் பேசுவோம்!

### வெளிநாட்டு செய்தியாளர்களிடம் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

- ரோக்கியோ மாநாடு முடிவடைந்ததும் - விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம் பற்றிப்பேசலாம். அது பற்றி ஆழமாகக் கலந்துரையாடவேண்டிய தேவை இருக்கின்றது. விடுதலைப் புலிகள் கோருவதை நிறைவேற்றுவதிலுள்ள பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதன் மூலமே முரண்பாடுகளைத் தீர்க்கலாம் என, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தி முகவர்களுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறும்போது -

விடுதலைப் புலிகள் ரோக்கியோவுக்கு வரவேண்டுமென்பதைத்தான் அரசாங்கம் விரும்புகின்றது. விடுதலைப் புலிகள் கோருவது பற்றி பிரதமருடனும், அமைச்சர்களு

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பிரதமருக்கு எதிராக அந்நாட்டு மன்னரிடம் புகார்!

### பொ.ஐ.முன்னணி தயாராகிறது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளைப் பற்றி வரம்புமீறி - அவரைப்பற்றி நோர்வேப் பிரதமர் பொன்டவிக் விமர்சித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து - அவரைப்பற்றி நோர்வே மன்னரிடம் புகார் செய்யப்போவதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் மங்கள சமரவீர,

நோர்வேப் பிரதமரின் தேவையற்ற விமர்சனம்- ஜனாபதியையும் பொதுஜன ஐக்கிய முன்னணியையும் வேதனைக்குள்ளாகியுள்ளது.

இது, ராஜதந்திர வரம்புகளை மீறிய நோர்வேப் பிரதமரின் செயற்பாட்டால்தான் விளைந்துள்ளது. எனவே - இதுபற்றி நோர்வே மன்னரிடம் இன்னும் ஓரிரு தினங்களுக்குள் உத்தியோகபூர்வமாகப் புகார் ஒன்றைக் கையளிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

### விண்ணாணம் விநாசியர்



'புஷ் மாஸ்ரர்' என்ன புஷ்ஷே வந்தாலும் நிலைமை மாறாது...

## கடற்படைக்கு 'புஷ் மாஸ்ரர்' அமெரிக்கா வழங்குகிறது!

'புஷ் மாஸ்ரர்' என்ற நவீன தாக்குதல் ஆயுதங்களை கடற்படையினருக்கு வழங்குவதற்கு, அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தாக்குதல் ஆயுதங்கள்- கடற்படையின் அதிவேகப் படகுகளில் பொருத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

30 மி.மீ ரகத்தைச் சேர்ந்த இந்த ஆயுதங்களின் கொள்வனவு சம்பந்தமாக, வொஷிங்ரனில் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்கும், இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அமெரிக்கா இந்த ஆயுதத்தை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

கடற்படையின் தாக்குதல் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனேயே இந்த நவீன ஆயுதங்கள் வழங்கப்படவிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பாடசாலைச் சிறுமியிடம் தந்திரமாக காதணி அபகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

பாடசாலை முடிந்து வீடு செல்லக்காத்திருந்த சிறுமியினை, தந்திரமாக அழைத்துச்சென்ற திருடனால் - சிறுமியின் காதணி அபகரித்துச்செல்லப்பட்ட சம்பவமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில்- நல்லூர் மங்கயற்கரசி மகளிர் வித்தியாலய மாணவி ஒருவரிடமிருந்தே காதணி அபகரித்துச்செல்லப்பட்டுள்ளது.

பாடசாலை முடிந்து வீடு செல்வதற்காகக் காத்திருந்த சிறுமியை அணுகிய திருடன்- "உமது அம்மா திருமண வீட்டிலே நிற்கிறார். உம்மை அழைத்து வருமாறு என்னை அனுப்பினார்" என்று கூறி சிறுமியை அழைத்துச் சென்று, மறைவிடம் ஒன்றில் வைத்து தோட்டினை அபகரித்துவிட்டு - சிறுமியைத் தனியே விட்டுவிட்டு ஓடி மறைந்துவிட்டதாகத் தெரியவருகின்றது. (சு)

## சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சங்க தலைவர், உபதலைவர் பொலிஸாரால் கைது!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சங்கத் தலைவர் செ. அழகுராசா, உபதலைவர் த.முகுந்தன் ஆகியோர், நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக மரங்களைத் தறித்து, அவற்றை விற்று - பணத்தினை விடுதலைப் புலிகளுக்குக் கொடுப்பதாகப் பொலிஸார் தரப்பில் கூறப்பட்டே - இவர்கள் கைது செய்யப்பட்டனர். (09)

## மகா கும்பாபிஷேகம்

(நவிண்டில்)

வதிரி- உள்ளியன் ஒல்லை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில், இன்று எண்ணெய்க்காப்பு சாத்துதல் மு.ப 7 மணி முதல் பி.ப 3 மணி வரையிலும் நடைபெற்று, மகா கும்பாபிஷேகமும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (116)

## சுற்றாடல் வார நிகழ்வுகள்

உலக சுற்றாடல் தினம் - நாளை மறுதினம் கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி சகல பாடசாலைகளிலும் மரநடுகை, சிரமதானம் மற்றும் சுற்றாடலை பேணும் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி, மாணவர்களுக்கு கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன.

இத்தினத்தை ஒட்டி, ஒரு வார காலப்பகுதியை பாடசாலைகளில் சுற்றாடல் வாரமாகக் கடைப்பிடிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

## கஷ்டப் பிரதேச படிக்கு அங்கீகாரம்

நவாலி - அட்டகிரி சைவ வித்தியாசாலை, 10 சதவீத கஷ்டப் பிரதேசப்படி பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதம், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

## வினைத் திறமை தடைப் பரீட்சை

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கான வினைத் திறமை காண் தடைப்பரீட்சை - எதிர் வரும செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

அதிபர் சேவையின் 1,2 மற்றும் 3 ஆம் தரத்திலுள்ள அதிபர்களே மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். .(100)

## பிரதமர் நாளை ரோக்கியோவுக்கு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாளை ஜப்பானுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளதாகத் தெரியவருகின்றது. முதலில் தனிப்பட்ட விஜயமாக ஜப்பான் செல்லும் அவர், ஹிரோஷிமாவில் தங்கியிருப்பார்

தொடர்ந்து - ரோக்கியோவில் எதிர்வரும் 5 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், இலங்கைக் குழுவுக்கு- பிரதமர் ரணில் தலைமை வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலை கடற்தொழில் கற்கைபீடம் மன்னாரில் அமைக்கப்பட வேண்டும்!

## அரச அதிபர் விஸ்வலிங்கம் துணைவேந்தரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கடற்தொழில் கற்கைபீடம் ஒன்றை, மன்னாரில் உருவாக்கும்படி - மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் - யாழ்.பல்கலைக்கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி கடற்தொழில் கற்கை பீடத்தை உருவாக்குவதற்கேற்ற பௌதீகச்சூழல் மன்னாரில் உள்ளதாகவும் - அப்பகுதியில் யாழ். பல்கலைக்கழகம், கடற்தொழில் கற்கை பீடத்தை அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றும், இதனால் வடபகுதியில் மீன்பிடித் தொழிலை விருத்திசெய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே - இவற்றைக் கருத்திற் கொண்டு, யாழ். பல்கலைக்கழகம்- கடற்தொழில் கற்கை பீடத்தை மன்னாரில் அமைக்க வேண்டுமென்று, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரிடம் வேண்டுகோள், விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோள் அடங்கிய கடிதம் ஒன்று - மன்னார் அரசாங்க அதிபரால், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடன் தொடர்புகொண்டு, மேற்படி புதிய பீடத்தை அமைப்பதற்கு யாழ்.பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. (க)


## பாடசாலை அதிபர்களே மாணவ மணிகளே

உங்களுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் எல்லாம் 10% - 20% வரையான கழிவுடன் அள்ளி வழங்கப்படும். தரமான பாடசாலை அலுவலக உள்ளீடுகள், எல்லா வகையான பாடசாலை நூல்களும், சரித்திரம், சாஸ்திரம், பிரபல எழுத்தாளர்களின் படைப்புகள், அறிவு வளர்க்கும் நூல்கள், சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், அறிவு வளர்க்கும் விளையாட்டு உபகரணங்கள் (கணிதம் கற்க), டீன் உபகரணம் (ஆங்கில உச்சரிப்பு), ஸ்கிறபல்ஸ், மோனாபொலி, அத்துடன் மக்கினற, பெனல், பச்சை போட் வகைகள், எல்லா அளவுகளிலும் பயில் (File) அலுமாரி (கபினற்) இரும்பு அலுமாரி, பாடசாலை நூல் அலுமாரி, தொழில்சார் உபகரணங்கள், விவசாய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள். எங்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்கள் இலவசமாக வன்னிவரை பட்டுவாடா செய்யப்படும்.

(சி-1028)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-2225542


## யாழ்ப்பாண மாநகரசபை

### உள்ளூராட்சி வாரத்தையொட்டிய குறைகேள் சேவை - 2003

எதிர்வரும் ஜூலை 14 முதல் 20 வரையான ஒரு வார காலத்தினை உள்ளூராட்சி வாரமாகப் பிரகடனப்படுத்தி அவ்வாரத்தில் உள்ளூராட்சிச் சேவை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, அவர்களின் பங்களிப்புடன் அவ்வாரத்தைப் பயனுள்ள வகையில் கொண்டாடுவது சாலச் சிறந்ததென உள்ளூராட்சி ஆணையாளரினால் எமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி வாரத்தில் குறைகேள் சேவையொன்றினை, அதாவது மக்களின் குறைகளை அறிந்து அவற்றை உடனுக்குடனும் தொடரும் நாட்களிலும் நிவர்த்தி செய்வதற்கு வசதியாக மாநகர சபையால் தீர்வு காணப்படும். தாங்கள் எதிர்பார்க்கும் குறைபாடுகளை விரிவாக எழுதி, எதிர்வரும் 25.06.2003 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டம் தொடர்பான விசேட அலுவலக வாயிலில் பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருக்கும் 'குறைகேள்' விண்ணப்பப் பெட்டியினுள் சேர்க்குமாறு யாழ். நகர மக்கள் அனைவரும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(இ.இராமலிங்கம்)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-1043)


உ
தில்லையம்பதியாள் துணை

# கோண்டாவில் தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## சுபானு வருஷம் 28 ஆவது ஆண்டு

## வைகாசி மஹோற்சவப் பெருவிழா 2003



05.06.2003 வியாழன் முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
09.06.2003 திங்கள் மாலை 7.00 மணிக்கு பூச்சப்பறம்
10.06.2003 செவ்வாய் மாலை 7.00 மணிக்கு வசந்த உற்சவம்
12.06.2003 வியாழன் பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய முன்றலில் வேட்டை, மாலை 7.00 மணிக்கு சப்பறம்.
13.06.2003 வெள்ளி முற்பகல் 10.00 மணிக்கு தேர். மதியம் அன்னதானம்.
14.06.2003 சனி முற்பகல் 10.மணிக்கு பூரணைத் தீர்த்த உற்சவம், மதியம் அன்னதானம்.
பிற்பகல் 4.30 மணிக்கு ஸ்ரீ சக்கர பூசை, 5.00 மணிக்கு திருவூஞ்சல், 6.00 மணிக்கு கொடியிறக்கம் தொடர்ந்து சண்டேஸ்வரி உற்சவம்.
15.06.2003 ஞாயிறு மதியம் அன்னதானம், மாலை 7.00 மணிக்கு பூங்காவனம்
16.06.2003 திங்கள் காலை பிராயச்சித்த அபிஷேகம், மாலை 7.00 மணிக்கு வைரவர் மடை.

மஹோற்சவ பிரதமகுரு
சிவகாம கிரியா இரத்தினம்
சிவ ஸ்ரீ சதா மகேஸ்வரக் குருக்கள்
[பேச்சியம்மன் தேவஸ்தானம், நாயன்மார்கட்டு]

திருக்கோயில் நித்திய பூசகர்
சிவஸ்ரீ சிவ.மகேஸ்வரக்குருக்கள்
[தில்லையம்பதி]

மங்கள இசை
K. குமாரதாஸ் குழுவினர்,
[கல்வியங்காடு]

தினமும் இரவு 8.00 மணிதொடக்கம் 9.00 மணிவரை தெய்வீகப் பேருரை நடைபெறும்.

தில்லையம்பதி
04.06.2003

தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே
சரணம்

இங்ஙனம்:
திருக்கோயில் பரிபாலன சபை.

(366)



ராஜா யாழ்ப்பாணம்.



கடைசிவாரம்
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ்
புதிய கீதை
10.30, 2.30 மட்டும்
4 முதல் 5வரை
CAST AWAY
இரவு 7.30 மட்டும்
(சி-973)

நிறஞ்சனாஸ் சங்கானை

கமலஹாசன், மாதவன் நடித்த
அன்பே சிவம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 3.45 (பு.நே)
The Rock The scorpion king
(சி-974)

# புதிய அரசாங்கம் நிறுவ முயற்சிக்கும்போதே சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்பாடு!

## ஜே.வி.பி. சார்பில் கருத்து முன்வைப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, புதிய அரசு ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போதே - ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சூழல் உருவாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தமாத நடுப்பகுதியில் இரு கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று, முன்னர் கூறப்பட்ட போதும், பின்னர் கடந்த மாத இறுதிவரை அது பிற்போடப்பட்டது.

ஆனால், இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் தெளிவான இணக்கப்பாடு ஒன்று இதுவரை எட்டப்படாததால், புரிந்துணர்வு உடன்படிக்கை குறுகியகாலத்துக்குள் கைச்சாத்திடப்படக்கூடிய சூழ்நிலை இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, இருகட்சிகளும் இணைந்து புதிய அரசு ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கும்போது, அல்லது தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்கும்போது இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடலாம் என்று, ஜே.வி.பியின் சார்பில் கருத்து முன்வைக்கப்பட்டிப்பதாகவும் தெரிய வருகிறது.

## லொத்தர் சபை வாகனங்கள் வேட்பாளர்களிடம்!

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டு தேர்தலின் போது - தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான 37 வாகனங்கள் பொ.ஐ.மு.வில் போட்டியிட்ட அபேட்சகர்களின் பாவனைக்காகவும், தேர்தல் பிரசாரத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், தேசிய லொத்தர் சபை 40 இலட்சம் ரூபாவை இழந்துள்ளது.

அனுருத்த ரத்வத்த, மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க, அனுரா பண்டாரநாயக்க போன்ற பல அபேட்சகர்களின் பாவனையில் இந்த வாகனங்கள் இருந்ததாக 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## லொத்தர்சபை கணக்காய்வு அறிக்கையில் தவறுகள் இருப்பதாகக் குற்றச்சாட்டு!

### கணக்காய்வாளர் நாயகம் சுமத்துகிறார்

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் கடந்த வருட கணக்காய்வு அறிக்கைகளில் - தவறுகள் இருப்பதாகக் கணக்காய்வாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

1999 ஆம் , 2000 ஆம் ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளில் நிறையத் தவறுகள் காணப்படுவதாகவும், இந்த இரண்டு வருடங்களுக்கான கணக்காய்வு அறிக்கைகள் ஒன்றாகவே சமர்ப்பிக்கப்பட்டு இருப்பதாகவும் கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டுக்கான லொத்தர் சபையின் நிதிக் கொடுப்பனவுகள் தொடர்பாக, முறையான கணக்குகள் பேணப்படவில்லை. அத்துடன், பரிசு பெற்றோருக்கு வழங்கப்பட வேண்டிய 32 லட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படாததும் கண்டறியப்பட்டிருக்கிறது எனக் கணக்காய்வாளர் நாயகம் மேலும் அறிவித்துள்ளார்.

## ஐ.தே.க. நிறைவேற்றுக்குழு எம்பிலிப்பிட்டியவில் கூடும்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழு அடுத்த மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் எம்பிலிப்பிட்டியவில் கூடவுள்ளது. இது தொடர்பான தீர்மானம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய அரசியல் நிலை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதேச்சதிகார நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

ஐ.தே.கவின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை முன்னிட்டு, மாபெரும் கண்காட்சி ஒன்றை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் ஜோன் அமரதுங்க முன்பாக எதிர்க்கட்சியினர் வைத்த மலர் வளையம்!

### நாடாளுமன்றத்தில் நேற்று பரபரப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது - கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்க எழுந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு முன்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் வளையம் ஒன்றை வைத்தனர். இதனால் நாடாளுமன்றத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது - பொ.ஐ. முன்னணியைச் சேர்ந்த நிமால் சிறிபால டீ சில்வா, தென்மாகாண அமைச்சர் 'சண்டி மல்லி' கொல்லப்பட்டது தொடர்பாகக் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பதிலளிக்க எழுந்தார். உரை நிகழ்த்த ஆரம்பித்ததும், பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்களான, மகிந்தானந்த அளுத்கமகே, பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர, ஜெகத் புஷ்பகுமார, றோகித அபேகுணவர்த்தன போன்றோர் மலர் வளையம் ஒன்றைக் கொண்டுவந்து, அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு முன்னால் வைத்தனர்.

'சண்டி மல்லி' கொலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே அவர்கள் இவ்வாறு மலர்வளையத்தை வைத்ததாகத் தெரியவருகின்றது. இதையடுத்து, சபாநாயகர் மலர் வளையத்தை நாடாளுமன்றத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சபைக் காவலர்களைப் பணித்தார்.

சபைக் காவலர்கள் மலர்வளைத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றபோது - ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ரட்ணதிலக அந்த மலர் வளையத்தை வாங்கி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் முன்பாக கொண்டுபோய் வைத்தார்.

பின்னர், இந்த மலர் வளையத்தை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மீண்டும் அமைச்சர் ஜோன அமரதுங்க முன்பாகக் கொண்டுபோய் வைத்தனர்.

இதனால், சபை நடவடிக்கைகள் குழப்பமடைந்தன. சபாநாயகர் உடனடியாக மலர் வளையத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சபைக் காவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்ததோடு, அரைமணி நேரத்திற்குச் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார்.

அத்துடன், நாடாளுமன்றத்திற்குள் எப்படி மலர் வளையம் கொண்டுவரப்பட்டது என்பது குறித்து, உடன் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும் சபாநாயகர் உத்தரவிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்தார்.

இதேவேளை - 'சண்டி மல்லி' படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பொ.ஐ.முன்னணி மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## அமைச்சர் 'சண்டி மல்லி' படுகொலை பொலிஸ் உயரதிகாரிகளுக்கு தொடர்பு?

### பொலிஸ் விசாரணைகள் தீவிரம்

தென்மாகாண சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அமைச்சர் 'சண்டி மல்லி' எனப்படும் ரஞ்சித் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன், இரகசியப் பொலிஸ் உயரதிகாரிகள் சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக, கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமைச்சர் 'சண்டி மல்லி' படுகொலைக்கு சூரியவெவ பாதாள உலகக் குழுவே பொறுப்பு எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சூரியவெவ பாதாள உலகக் குழுவின் தலைவருக்கும், இரகசியப் பொலிஸ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கும் நீண்டகாலமாகத் தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

'சண்டி மல்லி' கொலை தொடர்பான செயற்திட்டம் குறித்து, சூரியவெவ பாதாள உலகக் குழுவின் தலைவர் ஐம்பது தடவைகளுக்கு மேல் தொலைபேசி மூலம் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியுடன் கலந்துரையாடியிருப்பதாகவும் தெரியவருகிறது.

குற்றப்புலனாய்வுப் பணியகத்துக்குச் சென்ற அமைச்சர் 'சண்டி மல்லி'யைக் கொலை செய்வதற்காக - அவர் அங்கிருந்து திரும்பும் வரை, நீண்ட நேரமாகக் கொலையாளிகள் யோர்க் வீதியில் காத்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

சூரியவெவ பாதாள உலகக் குழுவுக்கும் - பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கும் உள்ள தொடர்புகள் குறித்தும், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.



நெதர்லாந்தில் தாயகக் கலைஞர்களின் 'தாயக பரணி' இசை நிகழ்ச்சியில், உற்சாக மிகுதியால் ஆடும் சிறுவர்களைப் படத்தில் காணலாம்.

## மக்களுடன் மோதிய கடற்படை; விசாரணை நடத்தப் பணிப்பு!

### கடற்படைத் தளபதி நடவடிக்கை

(கொழும்பு)

வத்தளை - மாபொலவில் பொதுமக்களுக்கும், கடற்படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பாக விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கடற் படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, மேற்குப் பிராந்திய கடற்படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாபொலவில் ஹோட்டேல் ஒன்றுக்குச் சென்ற கடற்படையினர் பொதுமக்களுடன் தகராறு செய்ததையடுத்து இந்த மோதல் ஏற்பட்டது. இதையடுத்து பொதுமக்களின் இரண்டு வீடுகளும், இரண்டு வாகனங்களும் கடற்படையினரால் சேதமாக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து, பொதுமக்கள் நேற்றுமுன்தினம் வீதியை மறித்து-ரயர்களை எரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்தே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, மேற்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

## சகவாழ்வு அரசியலை முன்னெடுக்க பிரதமரும் அமைச்சர்களுமே தடை!

### பேராயருக்கு சந்திரிகா கடிதம்

(கொழும்பு)

சகவாழ்வு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சில அமைச்சர்களுமே தடையாக இருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

பேராயர் ஒஸ்வால்ட் கோமிசுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே, ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் நெருக்கடிகள் குறித்து ஆயர்கள் சபை - ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு, ஜனாதிபதி அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு நான் காரணமல்ல. சகல இனங்களையும் ஒன்றுபடுவதற்கான முயற்சிகளில் தொடர்ந்தும் நான் ஈடுபடுவேன்.

தேசிய லொத்தர் சபை வருமானம் ஜனாதிபதி நிதியத்துக்கே வரவேண்டும். இந்த வகையில், லொத்தர் சபை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருப்பதே பொருத்தமானது. இந்த ரீதியில்தான் லொத்தர் சபையைப் பொறுப்பேற்றேன்.

இது சகவாழ்வு அரசியல் நடவடிக்கைகளுக்கு அபாயமானதொரு விடயமல்ல. சகவாழ்வு அரசியல் நகர்வுக்கு பிரதமரும், சில அமைச்சர்களுமே தொடர்ந்து தடையாக இருந்து வருகிறார்கள் என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

### வன்னிப் பகுதிக்கான

# பொருளாதாரத்தடை நீக்கப்பட்டும் எரிபொருள் கட்டுப்பாடு தொடர்கிறது

(கிளிநொச்சி)

கண்டிவீதி திறக்கப்பட்டு பொருளாதார தடை நீக்கப்பட்டும், வன்னி மாவட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருளை எடுத்துச்செல்லப் படையினர் அனுமதித்துள்ளனர்.

இதனால், வன்னி மாவட்டத்தில் இன்னமும் எரிபொருள் தட்டுப்பாடு நீங்கவில்லை எனத் தெரியவருகிறது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாதாந்தம் 33,000 லீற்றர் பெற்றோலும், 2 லட்சம் லீற்றர் டீசலும் தேவையாகவுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 6,600 லீற்றர் பெற்றோலும், 56 ஆயிரத்து 700 லீற்றர் டீசலையுமே அங்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையும் குறிப்பிட்ட நாளில் மட்டுமே கொண்டு செல்லமுடியும். இதனால், கிளிநொச்சி மாவட்டத்தல் மக்களின் எரிபொருள் தேவையை நிறைவுசெய்ய முடியாதுள்ளதாக கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவர் வை.குகராசா தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு அனுமதிக்கப்படும் எரிபொருள் போதாதிருப்பதாக அரசாங்கத்துக்குப் பலமுறை தெரியப்படுத்தியும், இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (34)

# இரவு நேரத்திலும் பொலிஸார் தென்மராட்சியில் சோதனை!

தென்மராட்சிப் பகுதியில், பரவலாக இரவு வேளைகளில் சாவகச்சேரிப் பொலிஸார் தீவிரமாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில், வெளிச்சமின்றி வரும் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்கள் யாவும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுகின்றன.

அத்துடன் - வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன பொலிஸாரால் சோதனையிடப்பட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

# மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை தரமுயர்த்துவதற்கு நடவழக்கை

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் மீன்பிடியியல் டிப்ளோமா பாடநெறியின் தரம் உயர்த்தப்படவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மீன்பிடியியல் டிப்ளோமா பாடநெறியின் தரத்தை உயர்த்துவது பற்றிப் பல்கலைககழகம் ஆராய்ந்து வருகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் இது தொடர்பான - ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும், இதற்கான அனுமதி கிடைத்ததும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

# மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கரவெட்டி ஸ்பேர்ஸ் அணி வெற்றி

புலோலி இளைஞர் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில், வடமராட்சியிலுள்ள 36 கழகங்கள் பங்குபற்றின.

இச்சுற்றுப்போட்டியின் - இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இப்போட்டியில் - தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாடியது.

இதில், கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம், முதலாவது இடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தைத் தட்டிக்கொண்டது. இரண்டாவது இடத்தை - தும்பளை நாவலர் விளையாட்டு கழகமும், மூன்றாவது இடத்தை புற்றளை ஸ்ரார் ஸ்பேர்ஸ் கிளப் அணியும் பெற்றுக் கொண்டன.

புலோலி இளைஞர் கழகத் தலைவர அ.சுதாபரன தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் - புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் ரி.கதிர்காமநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ். செயலக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் வீ. வீரபத்திரபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர். (17)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசிப் பெருவிழா

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால், வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் வைகாசிப் பெருவிழா, எதிர்வரும் வெள்ளி காலை 9 மணியளவில் விசேட பூசை ஆராதனைகளுடன் ஆரம்பமாகி, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.(17)

# பதில் கடமையாளர் இல்லாவிட்டால் மட்டும் ஓய்வு பெற்றவர்களுக்கு மீளவும் நியமனம்!

## மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களில் -ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்று சேவை புரிய விரும்புபவர்கள் - விண்ணப்பங்களை, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் மீள்நியமனம் செய்யப்படும் திகதிக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு, வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

மீள்நியமனம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்திலேயே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்த சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது - வடக்கு-கிழக்கு மாகாண சேவையின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் கோருபவர், சிறந்த உடல் மற்றும் உளநலத்தை உடையவராக இருத்தல்வேண்டும். இதே வேளை, சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் பதில் கடமை மூலம் குறிப்பிட்ட வெற்றிடத்தை நிரப்ப முடியாமல் இருக்கவேண்டும்.

இவற்றின் அடிப்படையில், குறிப்பிட்ட நபருக்கு ஒப்பந்த அடிப்படையிலான மீள்நியமனங்கள் வழங்குவது அவசியமானது என, திணைக்களத் தலைவரோ அல்லது பிரதேச செயலாளரோ சிபார்சு செய்யவேண்டும். அத்துடன் - ஒப்பந்த அடிப்படையிலான மீள்நியமனங்கள் யாவும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றே வழங்கப்படவேண்டும். உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரிலேயே, இந்தப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுகிறது என்று இச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

# பண்டத்தரிப்பு அபிவிருத்திக்கு ஆலோசனைக்குழு நியமனம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றி ஆராய்ந்து, ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் எஸ்.அருள்ஞானந்தன் மேற்கொண்ட முயற்சியால், பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய வீதிகள், ஒழுங்கைகள் புனரமைப்பு, வெள்ளம் வழிந்தோடுவதற்கான வாய்க்கால்கள் அமைத்தல், மலசல கூடங்கள் நிறுவுதல் உட்பட பல்வேறு வேலைத்திட்டங்கள் பற்றி இக்குழு ஆராய்வதுடன் -

துறை சார்ந்த அதிகாரிகளுடன் இதுகுறித்து தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (43)

## பெண்கள், சிறுவர்கள் மீதான குற்றச்செயல்கள்

# எவ்வாறு அணுகுவது என்பது பற்றி பொலிஸாருக்கு விசேட கருத்தமர்வு!

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான குற்றச்செயல்களை எவ்வாறு அணுகவேண்டும் என்பது தொடர்பாக, பொலிஸாருக்கான கருத்தமர்வு கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 57 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் - சட்டமா அதிபர், சிரேஷ்ட சட்டத்தரணி என்.துரைராசா, பொலிஸ் சட்டப் பிரிவின் பொறுப்பதிகாரி ஜி.தங்கவேல், சிறுவர் அரங்கச்சபை ஆலோசகர் அஜித் வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

இந்தக் கருத்தமர்வில் -பெண்கள், சிறுவர்கள் மீது சமூகத்தில் ஏற்படுத்தப்படும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும், இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாளவேண்டிய அணுகு முறைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர், எம்.எஸ்.எவ். பிரதிநிதிகள் உட்பட பலர் இந்தக் கருத்தமர்வில் கலந்து கொண்டனர். (03)

## சீமெந்து ஆலை மீள இயங்கவேண்டும் என்கிறார் அமைச்சர்

யுத்தத்தால் சேதமடைந்துள்ள காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையைப் புனரமைத்து மீண்டும் செயற்படுத்துவது அவசியமானது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இப்பொழுது தனியாரினால் இந்தியாவில் இருந்து சீமெந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டால், பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கல்வயல் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கல்வயல் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் - வீட்டுக் காணிகளைத் துப்புரவு செய்த போது வெடிக்காத நிலையிலிருந்த எறிகணைகள், மிதிவெடிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை கல்வயல் சிறீசண்முகானந்தா வித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள காணியைத் துப்புரவுசெய்தபோது - அமுக்க வெடியும், வெடிக்காத நிலையில் தரையில் கிடந்த எறிகணையொன்றும் கண்டெடுக்கப்பட்டது.

இதேவேளை - அருகிலுள்ள வீடொன்றிலிருந்து 3 மிதிவெடிகளும் மீட்கப்பட்டு கண்ணிவெடி அகற்றும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது.

இதனால், மீளக்குடியமர்ந்துளள மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். கல்வயல் பிரதேசத்தில் கடந்த கால யுத்தத்தின்போது, விதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்ற எந்த நிறுவனமும் அக்கறை காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



### முதலாவது அகவையில்



பெயர் - சி.சானுஜன்
முகவரி - கஸ்தூரியார் வீதி, நீராவியடி.

### நான்காவது அகவையில்

பெயர் - அ.திவ்யா
முகவரி - உடுத்துறை, தாளையடி



### பத்தாவது அகவையில்



பெயர் - பா.ஜனார்த்தன சர்மா
முகவரி - பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


------------------

பெற்றார் ஒப்பம்




# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



# மாணவர் மலர்

1) கீழே தரப்பட்டுள்ள மீன்களின் படங்களைக் கூர்ந்து நோக்குங்கள்.




மேலே தரப்பட்டுள்ள படங்கள் தொடர்பாக, சில விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடைதருக.

1) இந்த மீன் சுமார் நான்கு மீற்றர் நீளம் கொண்டதாகும். இதன் துடுப்புகள் எப்போதும் விரிந்தபடியே இருக்கும்.
2) இந்த வகை மீன்கள் நீரின் அடிப்பகுதியில் வாழ்கின்றன. இந்த வகை மீன்கள் குப்புறப்படுக்கும் பழக்கம் கொண்டதால், மேற்பகுதி சமமாக இருக்கும்.
3) இந்தவகை மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(1) மேலே தரப்பட்டுள்ள மீன்களின் பெயர்களை எழுதுக.

(1)...............................
(2)...............................
(3)...............................

(2) மேலே தரப்பட்டுள்ள மீன்களில் கடலில் வாழும் மீன்களின் இலக்கங்களை எழுதுக?
...........................................................

(3) ஆறுகளில் கூடுதலாகக் காணப்படும் மீன் எது, அந்த மீனின் இலக்கத்தை எழுதுக?
(...................)

(4) மேலே தரப்பட்டுள்ள மீன்களுள் வேகமாக நீந்தும் ஆற்றல் பெற்ற மீனின் இலக்கத்தை எழுதுக?
(...................)

(5) மூன்றாவது இலக்க மீன், பின்வரும் மீன்களுள் எதுவாக இருக்கலாம்?

1. முரீனா 2. ப்ாரை 3. கெண்டை 4. நெத்தலி

(2) கீழே தரப்பட்டுள்ள படங்களைப் பார்த்து, வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

(1)



இங்கு தரப்பட்டுள்ள பூச்சியின் பெயர் என்ன ?

1. இலைப்பூச்சி 2. கும்பிடுபூச்சி
3. சில்வண்டு 4. பிள்ளைப்பூச்சி

(2) கீழே தரப்பட்டுள்ள பூச்சி தரையைக் குடைந்து செல்லும் ஆற்றல் பெற்றது. நெற்பயிர்களையும், விவசாயப் பயிர்களையும் சேதப்படுத்துவதால் - இதனை விவசாயிகளின் எதிரி என்பர். இப்பூச்சியின் பெயர் என்ன?



1. வெட்டுக்கிளி
2. கறையான்
3. பிள்ளைப்பூச்சி
4. இலைப்பூச்சி

(3) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுள் அடிக்கோடிடப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.

1. அதிகாலையில் கோயில் மணியோசை கேட்டது. [ ]
2. கண்ணனிடம் உள்ள தீப்பெட்டிக்குள் தீக்குச்சிகள் இல்லை. [ ]
3. இன்று சந்தையில் மாம்பழங்கள் மிகவும் மலிவாக விற்கப்பட்டன. [ ]
4. நாம் இரும்புச்சத்து உள்ள உணவுகளை உண்ணவேண்டும். [ ]
5. சிங்கள மக்களின் விருப்பமான உணவு பாற்சோறு ஆகும். [ ]

(4) கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

எலிகளுள் எத்தனை வகைகள் இருக்கின்றன. வயல்எலி, எலி, சுண்டெலி என மூன்று வகை எலிகள் உண்டு. தானியப் பயிர்களையும் அதன் கதர்களையும் வயல் எலி உணவாகக் கொள்கின்றது. இந்த எலிகளால் வயல்களில் விளைச்சல் பாதிக் கப்படுகின்றது. எலிகளும், சுண்டெலிகளும் வீடுகளில் பதுங்கி வாழ்கின்றன. இவை வீட்டிலுள்ள பொருட்களைக் கடித்துச் சேதமாக்குகின்றன. எலிகள் - பூனையைக் கண்டால் ஓடிவிடும். எலிகள் தமக்குத் தேவையான பொருட்களைக் கடத்திக் கொண்டு போகின்றன. பெரிய எலிகளைவிடத் தொல்லை தருவதில் சுண்டெலிகள் முக்கியபங்கு வகிக்கின்றன. வயல்எலிகளும், எலிகளும், சுண்டெலிகளும் பிளேக் போன்ற கொடிய நோய்கள் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்றன.

1. எலிகளில் எத்தனை வகைகள் இருக்கின்றன?

...........................................................

2. எந்த எலி பயிர்களை நாசம் செய்கிறது.?

...........................................................

3. மனிதனுக்கு அதிக தொந்தரவை எந்த எலிகள் தருகின்றன?

...........................................................

4. எலிகளால் பரவும் நோய் எது?

...........................................................

5. பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக?

1) எலிகள்........................ 2) வயல்.....................
3) பூனை ........................ 4) வீடுகள்.....................

5. இப்பந்தியில் உள்ள நிகழ்காலச் சொற்கள் மூன்று தருக.
1)............. 2)............. 3).............

(5) சரியான பெயர்ச்சொற்களைத் தெரிவுசெய்து ✓ என்ற அடையாளத்தை இடுக.

| | | |
|---|---|---|
| 1. நான் எழுதிய | படம் ☐ | கதை ☐ |
| 2. வானொலியில் கேட்ட | காட்சி ☐ | பாடல் ☐ |
| 3. மின்னிய | மின்னல் ☐ | மழை ☐ |
| 4. சிரித்த | மனம் ☐ | முகம் ☐ |
| 5. ஒரு லீற்றர் | பாண் ☐ | பால் ☐ |
| 6. சுவையான | பழம் ☐ | காய் ☐ |

(6) ஐந்து மாணவர்கள் பாடசாலைக் கட்டட நிதிக்காக சீட்டு விற்பனை செய்து பெற்ற பணம் தொடர்பான, விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடைதருக.

| நாள் | தீபன் | வதனி | மாதவன் | தீபா | மேரி |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் சதம் | ரூபாய் சதம் | ரூபாய் சதம் | ரூபாய் சதம் | ரூபாய் சதம் |
| சனிக்கிழமை | 520 . 00 | 370 . 00 | 405 . 00 | 870 . 00 | 720 . 00 |
| ஞாயிற்றுக் கிழமை | 880 . 00 | 745 . 00 | 635 . 00 | 930 . 00 | 690 . 00 |

1. தீபா சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?
(...................)

2. தீபா எந்தத் தினத்தில் கூடுதலாகப் பணத்தைச் சேர்த்துள்ளார்?
(...................)

3. வதனி சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?
(...................)

4. தீபனும், மாதவனும் சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?
(...................)

5. பெண்கள் சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?
(...................)

6. ஆண்களைவிட பெண்கள் எவ்வளவு பணம் கூடுதலாகச் சேகரித்துள்ளனர்?
(...................)

7. மிகக் கூடுதலாகப் பணம் சேகரித்தவர் யார்?
(...................)

8. மிகக் குறைவாகப் பணத்தைச் சேகரித்தவர் யார்?
(...................)

9. ஒவ்வொருவரும் சேகரித்த பணத் தொகைகளை ஏறுவரிசையில் எழுதுக?
(...................)

10. ஒவ்வொருவரும் சேகரித்த தொகைகளை இறங்குவரிசையில் எழுதுக?
(...................)

11. மிகக் கூடுதலாகப் பணம் சேகரித்தவரின் பணத் தொகைக்கும், மிகக் குறைவாகப் பணம் சேகரித்தவரின் பணத்தொகைக்கும் இடையேயான வித்தியாசம் யாது?
(...................)

12. ஐந்து மாணவர்களும் கட்டட நிதிக்காகச் சேகரித்த மொத்தத் தொகை யாது?
(...................)

(7) "என்னுடைய நண்பனுடைய பிறந்தநாள் அன்று".... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1...........................................................
2...........................................................
3...........................................................
4...........................................................
5...........................................................
6...........................................................

(தொடரும்....)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை

# காரணிப்படுத்தல் முறைகள்

(14.05.2003 இன் தொடர்ச்சி...)

### முறை VI

முறை II, III ஐ பின்பற்றி பின் வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

உதாரணமாக

1) $5x^2 - x - 120$ இதனைக் காரணி காணும்போது
$5 \times 120$
$50 \times 12$
$25 \times 24$ இதற்கு -25 உம் 24 உம் காரணிகள் ஆகும்.

2) $3x^2 + 2x - 40$ இதற்குக் காரணி காணும்போது
$3 \times 40$
$6 \times 20$
$12 \times 10$ இதன் காரணி
12 உம் - 10 உம் ஆகும்.

$3x^2 + 12x - 10x + 40$
$3x (x + 4) -10 (x + 4)$
$(x+4) (3x - 10)$

மேற்போன்ற உதாரணம்போல், பின் வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $6y^2 + 19y - 20$
2. $4x^2 + x - 18$
3. $8y^2 + 6y - 9$
4. $2b^2 + 2b - 24$
5. $4a^2 + 13a - 12$
6. $8x^2 + 22x - 6$
7. $10y^2 + 24y - 18$
8. $5x^2 + 11x - 36$
9. $15b^2 + 8b - 12$
10. $10x^2 + 31x - 18$

### முறை VII

1) $a^2 - b^2$
$(a-b) (a+b)$

2) $4x^2 - 1$
$2^2x^2 - 1^2$
$(2x - 1) (2x + 1)$

3) $16y^2 - 144$
$4^2y^2 - 12^2$
$(4y - 12) (4y + 12)$

இம்முறைப்படி பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக

1. $25x^2 - 1$
2. $y^2 - 169$
3. $36p^2 - 625$
4. $x^2 - 1$
5. $4y^2 - 169$
6. $49x^2 - 196$
7. $16 y^2 - 225$
8. $25p^2 - 400$
9. $289 - 4y^2$
10. $484 - 36p^2$

உதாரணம்

1) $32x^3 - 128 x$
$2x (16x^2 - 64)$
$2x (4^2x^2 - 8^2)$
$2x [(4x - 8) (4x + 8)]$

2) $y^3x - 100x^3y$
$xy (y^2 - 10^2x^2)$
$xy [ (y-10x) (y+10x) ]$

இந்த உதாரணத்தைப்போல், பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $300 x^2 - 48y^2$
2. $(a-b)^2 - 100y^2$
3. $(2a +5)^2 - (5b-3)^2$
4. $243a^2 - 192$
5. $k^2 - (6x+ y )^2$

### முறை VIII

உதாரணம்

1) $a^3 - b^3$
$(a-b)^3$
$(a-b) (a^2 + ab + b^2)$

2) $x^3 + y^3$
$(x+y)^3$
$(x+y) (x^2-xy+ y^2)$

3) $8p^3 - 1$
$2^3p^3 - 1^3$
$(2p - 1)^3$
$(2p - 1) (4p^2 + 2p + 1)$

பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $64 x^3 - 125$
2. $216y^3 - 27$
3. $1000p^3 + 1$
4. $x^4 - x$
5. $(ab)^3 + (xy)^3$

### முறை IX

உதாரணம்

$Rx - py + px - Ry$
$Rx - Ry + px - Py$
$R(x-y) + p (x-y)$
$(x-y) (R+P)$

இந்த உதாரணத்தைப்போல், பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $2xp - 3yb + 6xy - bp$
2. $8ay - 2by + 8ax - 2bx$
3. $15 pt + 4Rq - 6Rp - 10 Tq$
4. $a (x-y) + bx - by - cx + cy$
5. $2ax - 3ay - 8x + 12y$
6. $12ay - 3yc - 4a + c$
7. $a^2 - 2a - y^2 + 1$
8. $6px - 3py + 2Rx - yR$
9. $2pk - 9R + 6pR - 3k$
10. $20xp + 2qy - 5py - 8qx$

### முறை X

விரிவுக்காரணி

உதாரணம்

(a)

1) $(x+2)^2$
$= (x+2) (x+2)$
$= x (x+2) +2 (x+2)$
$= x^2+2x+2x+4$
$= x^2+4x+4$

2) $(2x - 3)^2$
$= (2x-3) (2x-3)$
$= 2x(2x-3) -3(2x-3)$
$= 4x^2 - 6x -6x +9$
$= 4x^2 +12x +9$

3) $(2/x +4)^2$
$= (2/x + 4) (2/x +4)$
$= 2/x \times 2/x +2/x \times 4 + 4 \times 2/x +16$
$= 4/x^2 + 8/x +8/x + 16$
$= 4/x^2 + 16/x + 16$

பின்வருவனவற்றை விரித்து எழுதுக.

1. $(3y + 3)^2$
2. $(4x - 6)^2$
3. $(6y - 2)^2$
4. $(2x + 2y)^2$
5. $(7p -2)^2$
6. $(x +1/3)^2$
7. $(y - 2/5)^2$
8. $(7y - 4/3)^2$
9. $(6a - 5b)^2$
10. $(2x/4 + 6)^2$

உதாரணம்

(b)

1) $(a +3)^3$
$(a +3) (a + 3) (a+3)$
(a+230 (a2+6x+9)

2) $(a-2)^3$
$(a -2) (a -2) (a -2)$
$(a -2) (a^2 - 4a + 4)$

(தொடரும்...)

சி. சிவசெந்தூரன்

# வடக்கு – கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

## பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

(சென்றவாரத் தொடர்ச்சி...)

10) நேரம்: செக்கன்
(1) ஓம்: மின்தடை (2) கனவளவு: லீற்றர்
(3) அகலம்: பரப்பளவு (4) மழை: முகில்

11) ஒரு பாடசாலையின் ஆசிரியர் குழுவில் ஆண்களுள் 20 வதமானோரும், பெண்களில் 40 வீதமானோரும் கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றினர். ஆசிரியர் குழுவில் 32 வீதமானோர் ஆண்கள் எனின், மொத்த ஆசிரியர்களுள் எத்தனை சதவீதத்தினர் சுற்றுலாவில் பங்குபற்றினர்?

(1) 21% (2) 30% (3) 33% (4) 35% (5). 60%

12) குறித்த ஓர் ஆரம்பப் பாடசாலையில், ஒரு வாரத்தில் புதன்கிழமை நீங்கலாகப் பிள்ளைகளின் வரவு பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| நாள் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 742 | 754 | - | 736 | 743 |


அவ்வாரத்தில் பிள்ளைகளின் சராசரி வரவு 747 ஆயின், புதன்கிழமை பாடசாலைக்குவந்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 736 (2) 739 (3) 750 (4) 760

13) பரீட்சகர் ஒருவர் 50 வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்றுக்கு மாணவன் ஒருவன் அளித்த விடைத்தாள்களைத் திருத்தினார். அவர் திருத்தமான விடைகளில் இருந்து, பிழையான விடைகளின் எண்ணிக்கையின் இரு மடங்கைக் கழித்த பின்னர், அவனுக்கு 38 புள்ளிகளை வழங்கினார். மாணவன் 50 வினாக்களுக்கு விடை எழுதி இருந்தால், அவன் எத்தனை வினாக்களுக்குத் திருத்தமாக விடை எழுதியுள்ளான்?

(1) 19 (2) 38 (3) 41 (4) 46

14. A, B, C என்பன மூன்று காணித்துண்டுகள். B இன் பரப்பளவு 64 ஆகவும், C இன் பரப்பளவு 25 ஆகவும் இருப்பின், A இன் பரப்பளவு யாது?




(1) 196 (2) 169 (3) 144 (4) 121

15 ஆம், 16 ஆம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

சிறிய ஆகாய விமானம் ஒன்றில் A, B, C, D, E, F என்னும் ஆறு பயணிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஆகாய விமானத்திலுள்ள எட்டு ஆசனங்களும், 1 தொடக்கம் 4 வரைக்கும் இலக்கமிடப்பட்ட நான்கு நிரைகளில் உள்ளன. ஒவ்வொரு நிரையிலும் இரு ஆசனங்கள் இருக்கின்றன. பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய ஆசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- A ஒரு நிரையில் தனியாக அமருதல் வேண்டும்.
- D அமரும் அதேநிரையில் B அமருதல் வேண்டும்.
- E அமரும் அதேநிரையில் C அமரக்கூடாது.
- ஒரேயொரு பயணி இருக்கும் நிரைகள் நிரை 1 ஆகவும், 3 ஆகவும் இருத்தல் வேண்டும்.


15) பின்வரும் எப்பயணி C அமரும் அதேநிரையில் அமருமாறு ஒழுங்குபடுத்தப்படலாம்.

(1) A (2) B (3) D (4) E (5) F

16) பின்வரும் நான்கு நிரைகளில் எந்த நிரைச்சோடிகள் தமக்கிடையே இடத்தை மாற்றலாம்?


(1) 2 ஆம் 3 ஆம், 1 ஆம் 4 ஆம்.
(2) 2 ஆம் 4 ஆம், 1 ஆம் 3 ஆம்.
(3) 1 ஆம் 3 ஆம், 2 ஆம் 4 ஆம்.
(4) 1 ஆம் 2 ஆம், 3 ஆம் 4 ஆம்.


17. பின்வரும் நான்கு உருக்களிலும் எவ்வுரு ஏனைய மூன்று உருக்களிலும் வேறுபட்டது.




(1) A (2) B (3) C (4) D

18) பின்வரும் மாதிரி உருவை மடித்து அமைக்கத்தக்க கனவுரு யாது?




(1) A (2) B (3) C (4) D

19 ஆம், 20 ஆம் வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டனவாகும். இரகசியக் குறியீட்டு மொழியில் எழுதப்பட்டுள்ள நான்கு வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஆனால், இரகசியக் குறியீட்டு மொழியில் ஆங்கில எழுத்துக்கள் அதே ஒழுங்கில் எழுதப்படவில்லை.

குறிப்பிட்ட இடத்திற்கு நேரத்திற்கு வருக SNYM
குறிப்பிட்ட நேரத்திற்கு சந்தித்துக் கதைப்போம் JQSM
வருக நாளை குறிப்பிட்ட இடத்திற்கு வருக YYNKM
நாளை அன்பாகக் கதைப்போம் QKM

19) 'நாளை குறிப்பிட்ட நேரத்திற்குச் சந்தித்துக் கதைப்போம்' என்ற வாக்கியம் இரகசியக் குறியீட்டு மொழியில் எழுதப்பட்டுள்ள விதத்தைச் சரியாகக் காட்டுவது.


(1) KMSJQ (2) KMJSQ
(3) SMJQK (4) MNJQS

20) YYSY என்ற இரகசியக் குறியீட்டு மொழி குறிக்கும் சரியான வாக்கியத்தைக் காட்டுவது.

(1) வருக வருக நேரத்திற்கு வருக.
(2) நாளை குறிப்பிட்ட இடத்திற்கு வருக.
(3) வருக வருக நாளை வருக.
(4) கதைப்போம் கதைப்போம் சந்தித்துக் கதைப்போம்.


21 ஆம், 22 ஆம் வினாக்களில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்ட இடங்களில் வரவேண்டிய இலக்கங்களைத் தருக.

21)





(1) 15 (2) 17 (3) 25 (4) 27

22)




(1) 58 (2) 68 (3) 78 (4) 88

23) பின்வரும் உருவில் எத்தனை முக்கோணிகள் உண்டு.



(1) 8 (2) 10
(3) 12 (4) 16

P. உமாசங்கர்

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தக் காங்கு நாடித் தலைச்சொல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## சீரழிவுகள் சிதையட்டும்!

**யாழ்.குடாநாட்டில் சமூகச் சீரழிவுகள் அதிகரிப்பது பற்றி மக்களிடையே அச்சமும் பதற்றமும் உருவாகி வருவதைத் தொடர்ந்து - இச்சீரழிவுகளைக் கட்டுப் படுத்துவதற்கும், இல்லாதொழிப்பதற்குமான நட வடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளப் போவதாக அறியவருகின்றது.**

**அண்மைய வாரங்களில் குடாநாட்டின் பல பகுதி களிலும் கொலைகளும், கொள்ளைகளும் அடிக்கடி நிகழ்வதான தகவல்கள் கிடைத்துவருவதும் - இவற்றால் மக்களிடையே ஒருவித பீதிநிலை ஏற்பட் டிருப்பதையும் தொடர்ந்து - மக்கள் அமைப்புக்கள் பலவற்றின் வேண்டுகோளைத் தொடர்ந்து - குற்றச் செயல்களைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை விடு தலைப் புலிகள் முன்னெடுக்கவிருக்கின்றனர்.**

**யாழ்.குடாநாட்டில் - ஒழுங்கான சமூகக் கட்ட மைப்பைப் பேணுவதற்குரிய நடவடிக்கைகளை - இங்கு நிலைகொண்டுள்ள படையினரோ, பொலிஸாரோ மேற்கொள்ளாமல் - அவர்கள் அறிந்திருக்கும் வண் ணமே குற்றமிழைத்தவர்கள் துணிவுடனும், சுதந் திரத்துடனும் நடமாடும் சூழலே இங்கு நிலவிவரு கின்றது.**

**பொலிஸார் வேகமுடனும், நடுநிலையுடனும் குற் றங்களைக் கட்டுப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை சமூகத்தில் மிகக் குறைந்துவிட்டதை மக்கள் அமைப் புக்கள் பலவும் சுட்டிக்காட்டுகின்றன.**

**சில சந்தர்ப்பங்களில் குற்றமிழைப்பவர்கள், பொலி ஸார் அறியும்வண்ணமே தமது குற்றங்களைத் தொடர்ந்து புரிந்துவருவதாகவும் மக்களிடையே கருத்து நிலவுகின்றது.**

**குற்றங்களைச் செய்தாலும் - பொலிஸாரைச் 'சமாளித்துவிடலாம்' என்ற மனப்பாங்கும் - குற்றமி ழைப்பவர்கள் மத்தியில் வலுவாக வேரூன்றிவருவ தையும் - குடாநாட்டில் பரவலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது.**

**இவ்வாறான நிலையில் - சமூகச் சீரழிவுகள் - எவ்வித அச்சமுமற்ற வகையிலும், தட்டிக்கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்ற திமிர்த்தனத்துடனும் - கட்டற்ற வகையில் அதிகரித்துவருவதை அவதா னித்த பொதுமக்களும், மக்கள் அமைப்புக்களும் - இதுபற்றி, விடுதலைப் புலிகள் கவனமெடுத்து, யாழ். குடாநாட்டை சமூகச்சீரழிவுகளிலிருந்து காப்பாற்றவேண் டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்ததன் பெய ரில் -**

**யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் கொலை, கொள்ளை, கோஷ்டிமோதல் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளை இல்லாதொழிப்பதற்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.**

**கடந்த காலங்களில் - யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோது சமூகசீர ழிவுகள் என்றால் என்ன என்று கேட்கக்கூடியதான சமூக ஒழுங்கமைவு நிலவியதைப் போன்று - மீண்டும் இங்கு அமைதியும் நிம்மதியும் சமூகச்சீரழிவுகள் பற்றிய எதுவித அச்சங்களும் அற்ற சூழ்நிலை உருவாக வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு -**

**இனிமேல் சாத்தியப்பாடாகும் என்ற நம்பிக்கை - விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதான தகவல்மூலம் கிடைத்திருக்கின்றது என்றே கூறலாம்.**

**குறிப்பாக - குற்றம் இழைப்பவர்கள் இதுவரை தமது அரசியல், பணம், அதிகாரம் போன்ற பலங்களின் அடிப்படையில் தப்பித்த நிலைமை மாறி - மக்கள் முன் அவர்கள் கொண்டு நிறுத்தப்படுவார்கள் என்ற செய்தியே - குற்றமிழைக்க முனைபவர்கள் மனங்களில் அச்ச உணர்வை இனி ஆரம்பிக்கவைக்கும்.**

**அதிலும் - பெண்கள் மீதான பாலியல் வன்முறை, சிறார்கள் மீதான துர்நடத்தைகளில் ஈடுபடுவோர் - மக்கள் முன் நிறுத்தப்பட்டு அவர்களது கோரமுகம் கிழித்தெறியப்படுவது - இனிமேலும் இவ்வாறான குற்றங்களைச் செய்யமுயற்சிப்பவர்களுக்கு நல்ல தொரு பாடமாக அமையவேண்டும்.**

**இதேவேளை - அண்மைய நாட்களில் - குடாநாட் டில் பல பகுதிகளிலும் நடைபெற்றுவரும் கொலைகள் பற்றித் தகுந்த விசாரணைகள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - குற்றவாளிகள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் தெரியவருவதா னது - பாராட்டத்தக்க மற்றுமொரு பணியாகும்.**

**இவ்வாறு குற்றமிழைப்பவர்களை இனங்காண்பதற் கும், குற்றங்களைத் தடுத்து - சமூகச்சீரழிவுகளை இல்லாதொழிப்பதற்கும் - அனைவரும் ஆக்கபூர்வமா கவும், துணிச்சலுடனும் ஒத்துழைக்கும் பட்சத்தில் - மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதியையும் பதற்றத்தை யும் தணித்து, சமூக ஒழுங்கை வலுப்படுத்த முடியும் என்பது திண்ணமே.**

# உடுவில் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் நிர்வாகத் திறனை ஒழுங்கமைப்பது தொடர்பாக ஆராய்வு!

(உடுவில்)

பாடசாலை மட்டத்திலுள்ள நிர்வாகச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக - வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

உடுவில் கல்விக்கோட்ட புதிய கல்வி அதிகாரியாக தெரிவு செய்யப்பட்ட, செ.குபேரநாதனுக்கு வரவேற்பு அளிக் கும் வகையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே - இந்த நிர்வாகச் சீர்கேடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது, கல்வி அதிகாரிகளின் ஆலோசனைகள் பெறப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் - சில ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் - பழைய நேரத்துக்கு ஆரம்பித்து, புதிய நேரத்திற்கு மாணவர் கள் வீடு செல்ல அனுமதிக்கப்படுவது குறித்துச் சுட்டிக்காட் டப்பட்டது. இதனால், அரைமணிநேரம் இழக்கப்படுவதாகவும், இது குறித்து தீவிர கவனம் எடுத்துக்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் தரமான கல்வி போதிப்பதற்கான உள்ளீட்டு நிதியை - கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அது சம்பந்தமான ஆவ ணங்கள் வழிகாட்டியில் கூறப்பட்டதற்கமைய பேணப்பட வேண்டும். இவற்றை கோட்டக்கல்விப் பணிப்பாளர், வலய மேற்பார்வையாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகி யோர் பார்வையிட்டு உறுதிப்படுத்துவர். இந்நிதி தவறாகப் பயன் படுத்தப்படுமேயானால், அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பாடசாலைக்கு வருகை தருமிடத்து அதை உறுதிப்படுத்தி வரவுச்சான்றிதழ் தரப்பட வேண்டும் என்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

உடுவில் கல்விக்கோட்டத்தை, மருதனார்மடம் வளா கத்தைவிட்டு வெளியே கொண்டுசெல்ல பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாலும், அவ்விடத்திலேயே அதனை இயங்க வைக்க வேண்டும் என அதிபர்கள் சார்பாக ஏகமனதாக கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாலும், உடுவில் கல்விக் கோட் டத்தை இராம நாதன் கல்லூரியில், முன்னர் யூனியன் கல்லூரி நடைபெற்ற கட்டடத்தில் இயங்க வைப்பது எனவும் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் பற்றாக்குறை, பாடசாலையின் தேவை, நிறை வேற்ற வேண்டிய பணிகள் போன்றவற்றைச் செயற்படுத்து வதற்கு பாடசாலையின் - பெயர், முகவரி, மாணவர், ஆசிரியர் தொகை, அதிபர் முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசா லைக்கும் கோட்டத்துக்கும் இடைப்பட்ட தூரம் போன்ற விபரங் களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர், ஆங்கில ஆசிரியர், ஆரம்பக்கல்வி ஆசிரியர் பிரச்சினைகளை ஆராய்ந்து இதற்கு இரண்டொரு மாதங்களில் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்வதெனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (101)

## தரம் 1 இல் 45 மாணவர்களே ஒரு வகுப்பில் இருக்கவேண்டும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் 1 இல் அனுமதி வழங்குவது தொடர்பான, புதிய நடைமுறைகளை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. தரம் 1 இல் மாணவர்களை அனுமதிக்கும்போது, ஒரு வகுப்பில் 45 மாணவர்களே இருக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், ஒரு வகுப்பில் 45 மாணவர்களுக்கு மேல் இருப்பதாகக் காரணங்காட்டி ஒரு மாணவனுக்கு அனுமதி மறுக்கப்படுமாயின், அது தொடர்பாக மேன்முறையீட்டுக் குழு வுக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டுக் குழுவின் சிபார்சுடன் 45 இற்கும் மேற் பட்ட மாணவர்களை வகுப்பில் அனுமதிக்கலாம் எனவும், கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த வருடம் - தரம் 1 இல் மாணவர்கள் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் இன்றுமுதல் இம்மாதம் 30 ஆம் திகதிவரை பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்ணுடன் சேஷ்டை; இளைஞன் நையப்புடைப்பு!

### முலவைச் சந்தியில் பட்டப்பகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முலவைச் சந்தியில் நேற்றுமுன்தினம், இளம் பெண்ணுடன் சேஷ்டை புரிந்த இளைஞர் ஒருவர் கலாசாரத் தைப் பேணும் குழுவினரால் நையப்புடைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மதியம் 2 மணியளவில் முலவைச் சந்தியால் சென்றுகொண்டிருந்த, யுவதி ஒருவருடன் மேற்படி இளைஞன் சேஷ்டை புரிந்தபோதே, கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

பின்னர், மேற்படி இளைஞன் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட் டார்.

## அரசின் மாற்றுயோசனை குறித்து தமிழ்ச்செல்வன் - கஜேந்திரகுமார் பேச்சு!

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத் தைத் தோற்றுவிக்குமாறு, விடுதலைப் புலிகள் முன்வைத் துள்ள கோரிக்கை தொடர்பாகவும், இது தொடர்பான அரசின் மாற்றுயோசனை குறித்தும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், வன்னியில் புலி களின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனு டன் பேச்சு நடத்தினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர், உடனடியாகக் கொழும்பு திரும்பிய கஜேந்திரகுமார், ஏனைய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையா டல் நடத்தியதாகத் தெரியவருகிறது.

### புலிகளை ரோக்கியோவுக்கு அழைப்பது

## ஜோன் வெஸ்பேர்க் தலைமையில் தூதரகத்தில் விசேட ஆய்வு!

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாட்டில் - விடுதலைப் புலிகளைப் பங்குபற்ற செய்வது எப்படி என்பது குறித்து, கொழும்பிலுள்ள நோர்வே தூதர கத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற இக்கூட்டத்தில் - இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ் பேர்க் உட்பட, நோர்வேத் தூதரகத்தின் உயரதிகாரிகள் பலரும் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகளை மேற்படி மாநாட்டில் பங்குபற்ற வைப்பதற்கு, இலங்கை அரசு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என்பது குறித்தும் அங்கு ஆராயப்பட்டது.

மேற்படி நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்வதற்காக, நேற்றுமுன்தினம் அதிகாலை ஜோன் வெஸ்பேர்க் கொழும்பை வந்தடைந்தார்.

## உடுவில் மருந்தகச் சுவர் அமைப்பதில் இழுபறி!

உடுவில் மத்திய மருந்தகத்திற்கான ஒருபக்க மதில் அமைக்கப்படுவதில், மூன்று வருடங்களாக நீடிக்கும் பிரச் சினை தீர்க்கப்படாததால் - இம்மருந்தகம் பல்வேறு பிரச்சினை களை எதிர்நோக்குவதாகத் தெரியவருகின்றது.

மூன்று வருடங்களுக்கு முன்னர், இவ்வைத்தியசாலையின் புதிய கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. அப்பொழுது மூன்று பக்கமும் சுற்றுமதில் கட்டிமுடிக்கப்பட்ட வேளையில், கிழக்குப் பக்கம் மட்டும் எல்லைத்தகராறினால் மதில் கட்டப்படுவது இடைநிறுத்தப்பட்டது.

இப்பிரச்சினை மூன்று வருடங்களாகியும், தீர்வு காணப் படாது இழுபறி நிலையிலேயே உள்ளது. இதனால், மருந்தகத் திற்குப் பாதுகாப்பு இல்லாதிருப்பதுடன், அங்குள்ள கிணறும், பொலித்தீன் பைகள், கற்கள், கடதாசிகள் போன்றவற்றால் அசுத்தமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு இல்லாததால் - மூன்று வருடங்களுக்கு முன்னர், நீர்த்தொட்டிக்கு நீரை நிரப்புவதற்கெனக் கொள்வனவு செய்யப் பட்ட மின்மோட்டார் இன்றுவரை பொருத்தப்படவில்லை. இதனால், இங்கு கிளினிக்கிற்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் அதிக தூரம் சென்றே நீர் பெறவேண்டியுள்ளது. அத்துடன், ஒருபக்க மதில் இல்லாததனால் கட்டாக்காலி ஆடு, மாடுகள் உள் நுழைந்து பயன் தரும் மரங்களை அழித்து வருகின்றன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (101)

## சுற்றுலாப் பயணிகளுக்கு ஹெலிகொப்ரர் சேவை

### நான்கு நிறுவனங்கள் அனுமதிகோரின

உள்நாட்டில் ஹெலிகொப்ரர் சேவையை நடத்துவதற்கான அனுமதியை, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை யிடம் நான்கு நிறுவனங்கள் கோரியுள்ளன.

நாட்டில் சமாதானச் சூழ்நிலை நிலவிவருவதாலும், உல்லா சப் பிரயாணிகள் வரவு அதிகரித்துள்ளதாலும் - சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு ஹெலிகொப்ரர் சேவை யை நடத்த இந்த நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்று, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பேச்சாளர் தெரி வித்தார்.

இதற்கு முன்னரும் இரு நிறுவனங்கள் இத்தகைய அனு மதியைக் கோரி விண்ணப்பித்திருந்தன. உள்ளூர் விமான நிலையங்களிலிருந்து இந்தச் சேவைகளை நடத்தமுடியுமா என்று அரசாங்கத் தரப்பால் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

## விவசாய கடன்களுக்கு வட்டி வீதம் குறைப்பு

### இலங்கை வங்கி அறிவிப்பு

விவசாயக் கடன்களுக்கான வடடி வீதத்தை 8 சதவீத மாகக் குறைக்க, இலங்கை வங்கி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் பெறப்பட்ட விவசாயக் கடன் களுக்கே குறைந்த வட்டி வீதம் அறவிடப்படவுள்ளது. இலங்கை வங்கி ஆகக்கூடியதாக 50 லட்சம் ரூபாவை விவசாயக் கட னாக வழங்கிவருகிறது.

நெற்செய்கை, களஞ்சியப்படுத்தல் வசதி, விதைநெல் உற்பத்தி போன்றவற்றுக்கு இலங்கை வங்கி கடன்களை வழங்கிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கேட்டால் கிடைக்காது; தட்டினால்தான் கிடைக்கும்!

(நேற்றைய தொடர்ச்சி)

இதன்பின், 1959 ஆம் ஆண்டில் தாமே வளர்த்துவிட்ட பூதத்துக்குப் பலியானார். பண்டாரநாயக்க கொலையின் பின்,1960 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும், ஜூலை மாதத்திலும் நடந்த இரு தேர்தல்களிலும், தமிழரசுக் கட்சிக்கு நாட்டைத் தாரை வார்த்துக் கொடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றின் மீது ஒன்று குற்றஞ்சாட்டித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டன.

1960 ஆம் ஆண்டு ஜூலை மாதத் தேர்தலில், வெளிப்படையாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கிப் பிரசாரம் செய்த சிறிமா பண்டாரநாயக்க தமது கட்சிக்கு அமோகவெற்றியை ஈட்டிக்கொடுத்தார்.

இத்தேர்தலின் பின், ஆட்சிக்கு வந்த சிறிமா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பண்டாரநாயக்கவின் கொள்கையைத் தாங்கள் கடைப்பிடிக்கப்போவதாக அறிவித்தது. ஆனால், பண்டா - செல்வா ஒப்பந்தம் பற்றி மூச்சுக்கூடவிடவில்லை.


தமிழரசுக்கட்சி - அரசுடன் பேச்சு நடத்த முன்வந்தபோது, சிறிமா அரசு அதைத் தட்டிக்கழித்தது. சிங்களம் மட்டும் சட்டத்தை மட்டும் தீவிரமாகச் செயற்படுத்துவதற்கு அரசு முன்வந்தது. இதை எதிர்த்து வடக்கு - கிழககு பகுதிகளில் தந்தை செல்வா தலைமையில், அரச அலுவலகங்கள் முன் தமிழரசுக் கட்சித் தொண்டர்களும் தொடர்ந்து மறியல் செய்தனர். சில மாதங்கள் வடக்கு - கிழக்கில் அரச இயந்திரம் முற்றாகச் செயலிழந்தது.

இதேசமயத்தில், வடக்கு - கிழக்கு சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு ஆதரவாக மலையகத்தில் வேலைநிறுத்தம் செய்யப்போவதாகத் தொழிற்சங்கங்கள் சில அறிவித்ததும், அவ்விதம் செய்வது தேசத்துரோகமென்றும், அப்படி வேலை நிறுத்தம் செய்யும் தொழிற்சங்கத் தலைவர்களின் சொத்துக்கள் பறிமுதலாகுமென்றும் அரசு அறிவித்து மிரட்டியது. வேலைநிறுத்த முயற்சி கைவிடப்பட்டது.

வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம் இவ்வித மிரட்டல் மூலம், கைவிடச் செய்யப்பட்டது.

இதன்பின், யூகோஸ்லாவியா சென்று திரும்பிய பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க, வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி ஒரு அறிக்கை விடுத்தார். என்ன நடந்தாலும், அந்த விளைவுகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அதன் தலைவர்களுமே பொறுப்பு என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்து, தந்தை செல்வநாயகம் விடுத்த அறிக்கையில் - "நிராயுதபாணிகளான எங்கள் மீது, நீங்கள் உங்கள் படையை ஏவிவிட்டால், 1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி உங்கள் கணவன், துப்பாக்கியேந்திய ஒரு கொலையாளி முன் எந்த நிலையில் நின்றாரோ, அதேநிலையில்தான் நாமும் இருப்போம் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்" என்று பதிலுக்குத் தெரிவித்தார்.



தந்தை செல்வநாயகம்.



சிறிமா பண்டாரநாயக்க.

ஆனாலும், அமைதியாக அலுவலகங்களின் முன்னமர்ந்து, சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது ஆயுதப்படையினர் ஏவிவிடப்பட்டனர். மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்திரிகைக் கட்டுப்பாட்டு மசோதாவைக் கொண்டுவந்தபோது, சிறிமா அரசு ஒரு வாக்கினால், தோல்வியடைந்து பதவி இழந்தது.

அதுவரை, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிறிமா அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

1965 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில், மீண்டும் அரசியலுக்கு வந்த டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது. தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன், டட்லி சேனநாயக்க பேச்சுநடத்தி இரகசிய ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திட்டிருந்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் காங்கிரஸ், ஈரியகொல்லவின் கட்சி, சி.பி.டி சில்வாவின் கட்சி, பிலிப் குணவர்த்தனாவின் எம்.ஈ.பி போன்ற கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் ஒன்றை டட்லி அமைத்தார். தமிழரசுக் கட்சியின் சார்பில், எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானார்.

பண்டாரநாயக்க பிரதேசபைகள் அமைப்பதற்கு ஒப்புக் கொண்டிருந்ததுபோல, பிரதேசபை என்ற பெயர்ரைப் பாவிக்காமல் மாவட்டசபைகள் என்ற பெயரில் தமிழ் அரசுக்கட்சியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு டட்லி ஒப்புக் கொண்டிருந்தார். இதனைச் செயற்படுத்துவதற்காகவே திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஆனால், மாவட்டசபைகள் அமைப்பதற்கு அமைச்சரவைக்குள் உடன்பாடு ஏற்படவில்லை. காலம் கடந்து கொண்டிருந்தது. தமிழரசுக் கட்சியில் இளைஞர்கள் தலைமைக்கு எதிராகப் பிரச்சினை கிளப்பினர். இச்சமயத்தில் அமைச்சர்கள் சிலர் இரகசிய ஒப்பந்தத்தை எதிர்க் கட்சியில், சமசமாசக் கட்சித் தலைவர் டொக்டர். என்.எம்.பெரேராவிடம் கொடுத்துவிட்டனர். டொக்டர் என்.எம்., டட்லி - செல்வா இரகசிய ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தி அக்குவேறு ஆணிவேறாக அலசினார்.

அத்துடன், டட்லி - செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டது, திருகோணமலையில் கோணேசர் ஆலயப் பகுதியை, புனிதநகராகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையிலும், டட்லி தாம் அப்படி வாக்குறுதியளிக்கவில்லை என்றும் மறுத்துவிட்டார்.

இதனால், திருச்செல்வம் தனது அமைச்சர் பதவியைத் துறந்தார்.

டட்லி அரசுக்கு வழங்கிய ஒத்துழைப்பை தமிழரசுக் கட்சி விலக்கிக் கொண்டது.

தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, டட்லியுடன் செய்துகொண்ட ஒப்பந்தமும் நிறைவேறவில்லை.

1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்கு மக்களால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படும் அரசியல் நிர்ணயசபை புதிய அரசியலமைப்பை உருவாக்கும் என்று, தேர்தலில் சிறிமாவின் தலைமையிலான இடதுசாரிக் கூட்டு ஐக்கிய முன்னணி வாக்குறுதியளித்து ஆணையைப் பெற்றது.

இதன்படி, 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்பின், அமைக்கப்பட்ட அமைச்சரவையின் லங்கா சமாசக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டொக்டர். கொல்வின் ஆர்.டி. சில்வா அரசியல் அமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேசமயம், தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமானால் - அவர்களுக்கிடையில் ஒன்றுமை ஏற்படவேண்டுமென்ற குரல் ஓங்கிஒலிக்கத் தொடங்கியது. இந்த ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சியில் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவராக இருந்த ஞானமூர்த்தி ஈடுபட்டார். தமிழர் காங்கிரஸ் மற்றும் கட்சிகளையும் சேர்த்து ஓர் உடன்பாடும் காணப்பட்டது.

இக்கட்சிகளின் சார்பில் - ஆறு அம்சத்திட்டமொன்றும் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தை, இந்தக் கூட்டமைப்பின் சார்பில் அப்போது யாழ்.நகர மேயராக இருந்த சி.நாகராஜா, பிரதமர் சிறிமாவோவுக்கு கடிதம் அனுப்பிவைத்து, இது சம்பந்தமாக நேரில் சந்தித்துப் பேசி விளக்குவதற்கு, தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கு பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க, பதில் அனுப்பவே இல்லை. இது பற்றிப் பல தடவைகள் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்ட பின்னரே, நீண்டகாலத்துக்குப்பின் கடிதம் கிடைத்தது என்று, பிரதமர் பதில் அனுப்பியிருந்தார்.

இதன்பின், அரசியல் விவகார அமைச்சர் விடுத்த அறிவிப்பை ஏற்பது, தமிழ் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளை வழங்கக் கூடியதாகப் பிரதேச சுயாட்சி வழிசெய்யக்கூடிய அடிப்படைப் பிரேரணைகள் பலவற்றை தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் மூலம் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழர் கூட்டமைப்பு மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுக் கட்சியினர் தாக்கல் செய்த இந்த அடிப்படைப் பிரேரணைகள் அனைத்தும் - அரசியல் விவகார அமைச்சர் கொல்வின் ஆர்.டி. சில்வாவினால் விமர்சிக்கப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே நிராகரிக்கப்பட்டன.

இதன்பின், தொடர்ந்தும் அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை என்று தலைவர் செல்வநாயகம் அரசியல் நிர்ணயசபையில் அறிவித்தார். பின்னர், சபைக் கூட்டங்களில் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

புதிய சோஷலிசக் குடியரசு யாப்பு - ஆ.தியாகராஜா, அ.அருளம்பலம் ஆகிய தமிழ் உறுப்பினர்களின் ஒப்புதலுடனும் நிறைவேற்றப்பட்டது.

புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

**எஸ்.எம்.ஜி.**

காணப்படும் சந்தர்ப்பத்தையும் சிங்களத் தலைமை நிராகரித்தது.

புதிய சோஷலிசக் குடியரசு யாப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பதை தந்தை செல்வா தமது காங்கேசன்துறைத் தொகுதிப் பிரதிநிதித்துவத்தை ராஜினாமாச்செய்து மீண்டும் உபதேர்தலில் போட்டியிட்டு, அமோக வெற்றி பெற்று எடுத்துக்காட்டினார்.

ஆனால் என்ன பயன்?

சிறிமா ஆட்சிக்கு வந்ததும், 1971 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆயுதக்கிளர்ச்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு றோகண விஜயவீர தலைமையில் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி. ஆயுதப் போராட்டம் நடத்தியது. இந்திய உதவியுடன் சிறிமா இந்தக் கிளர்ச்சியை முறியடித்தார். (தொடரும்)

## விபத்தில் மூவர் படுகாயம்

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில், நேற்று நடைபெற்ற வீதி விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

வீதிவழியாக, வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் - கொற்றாவத்தையைச் சேர்ந்த கு.சுதாகரன் (வயது 23), க.சுசிகரன்(வயது 19), கு.பூபாலசிங்கம் (வயது 24) ஆகிய மூவருமே படுகாயமடைந்தனர். (116)

## கண்நோய் மருந்துக்குத் தட்டுப்பாடு

வெப்பக் காற்றின் தாக்கம் சில நாட்களாக அதிகரித்துள்ள காரணத்தால், கண்நோய் போன்ற தொற்று வியாதிகள் பரவத்தொடங்கியுள்ளன.

இவ்வேளையில் -கண்நோய்க்கான மருந்துக்கு வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உடுவில் அரசினர் வைத்தியசாலைக்கு ஏராளமான கண் நோயாளர் சில நாட்களாக வருகைதருவதால் அங்கு அவர்களுக்கு வழங்குவதற்கான கண்நோய் மருந்துக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (101)

# வெடிபொருள் அபாயத்தினால் அச்சமுற்றுள்ள கல்வயல் மக்கள்!




சாவகச்சேரி நகரத்திற்கு வடக்கே அமைந்துள்ளது கல்வயல் கிராமம். தென்மராட்சிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினால், பாரிய அழிவுகளைச் சந்தித்த கிராமங்களில் இதுவுமொன்றாகும்.

இக்கிராமத்தில், யுத்தத்தால் சேதமடையாத குடியிருப்புக்களே இல்லை. பல்குழல் எறிகணைகளால் பெருமளவு பயன்தருமரங்கள் அழிக்கப்பட்டன.

சமாதானச் சூழல் ஏற்பட்டதையடுத்து, சொந்த இடங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதைப்போன்று இப்பகுதியிலும் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

ஆனால், மிகவும் பாதிப்படைந்த நிலையிலுள்ள இக்கிராம மக்களுக்கு, இதுவரை எதுவித நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை. மீள்குடியமர்ந்த மக்களுக்கான 25,000 ரூபா கொடுப்பனவு இன்னமும் பெரும்பாலான மக்களுக்கு வழங்கப்படவில்லை.

குடிமனைகள் பலவற்றில் - கூரைகளின்றிய நிலையிலும், இடிபாடுகளுக்கு மத்தியிலும், பல குடும்பங்கள் அவலவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இக்கிராமத்தில், வதியும் மக்களில் பெரும்பாலானவர்கள்- விவசா

**ந.கஜமுகன்**

யத் தொழிலை மேற்கொண்டு வருபவர்கள்.

விவசாய நிலங்கள் பலவற்றில் யுத்தத்தின்போது, விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இதுவரை எந்த நிறுவனத்தினாலும்- அகற்றப்படாமையினால், பல விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேபோல், மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இடங்களிலும்- கண்ணிவெடிகள், மிதிவெடிகள் பெருமளவில் விதைக்கப்பட்டுள்ளன.

இதனால், இக்கிராமத்தில்- மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில், மிதிவெடியை கையில் எடுத்து விளையாடிய இரு சகோதரர்கள் தெய்வாதீனமாக அது வெடித்தபோது உயிர் தப்பியதும், ஒரு வருடமாக வசித்த வீட்டில் - பெண்ணொருவர் உரலை உருட்டிய வேளை முற்றத்தில் புதைந்திருந்த மிதிவெடி வெடித்து, காயங்களுக்கு இலக்கான சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. மிதிவெடி அபாயப் பலகைகள் தொங்கவிட்டு, பல மாதங்கள் கடந்த நிலையில் - எங்கள் கிராமத்தில் மட்டும் எந்த நிறுவனமும் கண்ணிவெடி அகற்ற முன்வரவில்லை என, இங்குள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# ஈரானுக்குள் ஆற்றின் வழியே சென்ற அமெரிக்கப் படையினர் கைதாகினர்!

## நீரோட்டம் இழுத்துச் சென்றதாகக் காரணம் தெரிவிப்பு



ஈராக்கிலுள்ள ஆறொன்றின் வழியே சென்றுகொண்டிருந்த அமெரிக்கப் படையினர் நால்வர் - அந்தப் படகு, நீரோட்டத்தில் இழுபட்டுச் சென்றதால் எல்லை கடந்து, ஈரானுக்குள் நுழைந்தனர்.

நான்கு அமெரிக்கப் படையினரும், ஐந்து ஈராக்கியர்களும் 'ஷற் அல் - அரப்' என்ற இந்த ஆற்றில் படகில் சென்று கொண்டிருந்தபோது அது - ஈரான் எல்லைக்குள் சென்றது.

இவர்கள், ஈரானியப் படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

படகில் சென்றவர்களைக் காணவில்லை என, ஏனைய அமெரிக்கப் படையினர் தேடியபோதே, இவர்கள் ஈரானியப் படையினரால் கைதாகியிருப்பது தெரியவந்தது.

'ஷற் அல் - அரப்' என்ற ஆற்றை உரிமை கொண்டாடுவதில் ஏற்பட்ட தகராறே - ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையே 1980 ஆம் ஆண்டளவில் இரு நாடுகளுக்குமிடையிலான போருக்கு முக்கிய காரணமாகியதும் - இந்தப் போர் எட்டு ஆண்டுகளாக நீடித்துப் பல்லாயிரம் பேரைப் பலிகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# கியூபாவில் தடுக்கப்பட்டிருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்!

## மன்னிப்புச் சபையும், அமெரிக்காவும் கோருகின்றன



25 வருட சிறைத்தண்டனை தீர்க்கப்பட்ட இருவர்

கியூபாவில் - ∴பிடல் காஸ்ரோ அரசாங்கத்தை எதிர்த்தமைக்காக - கைது செய்யப்பட்டு சிறைகளில் வைக்கப்பட்டிருக்கும் 75 பேரையும் விடுதலை செய்யுமாறு, கியூபாவிடம் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவர்களுக்கு, 28 வருடங்கள் கடுங்காவல் தண்டனை - கியூப அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மனித உரிமைகள் அமைப்புக்கான தமது பதிலில் - கைதானவர்கள் அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன இயங்கிய கைக்கூலிகள் என்றும், இவர்கள் - கியூப அரசாங்கத்தை சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட தேசத்துரோகிகள் என்றும் கியூபாவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதாகியவர்களில் - கடந்த ஏப்ரல் மாதம் கியூப விமானமொன்றைக் கடத்த முற்பட்டுப் பிடிக்கப்பட்ட ஐந்து பேரும் அடங்குவர்.

அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையிலான பகைமையில் - இதுவரையில் இரண்டு நாடுகளிலும் பல நூற்றுக்கணக்கானோர் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் - இவர்களில், பலர் உளவு வேலைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# முன்னாள் ஈராக் படையினர் பாக்தாத்தில் ஆர்ப்பாட்டம்!

பத்தாத்தில் - முன்னாள் ஈராக்கிய இராணுவத்தினர் நூற்றுக் கணக்கில் திரண்டு, தமக்குரிய சம்பளத்தைப் பெற்றுத் தரவேண்டுமென போராட்டம் நடத்தியுள்ளனர்.

சாதாரண பொதுமக்களது உடைகளை அணிந்திருந்த இவர்கள்- அமெரிக்கப் படைகள், தமது இராணுவத்தைச் சிதைத்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை - ஈராக்கிலுள்ள அமெரிக்க நிர்வாகம் - ஈராக்கின் பழைய இராணுவத்தைக் கலைத்து விட்டு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்து- புதிய ஈராக்கிய இராணுவம் ஒன்றை உருவாக்க இருப்பதாக வெளியான தகவலையடுத்தே - ஈராக்கின் முன்னாள் இராணுவத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதேவேளை - ஈராக்கில் புதிய நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கு அமெரிக்கர்கள் முயற்சித்தாலும் - முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் - ஆதரவாளர்களும், சதாமின் 'பாத்' கட்சி உறுப்பினர்களும் பெருமளவில் இருப்பதால், அவர்களில் எவராவது மீண்டும் புதிய அரசாங்கத்திற்குள் நுழைந்துவிடுவார்களோ என்று அச்சமடைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது.



கனடா ரோரான்ரோவில் நோர்த் யோர்க் வைத்தியசாலைக்கு வெளியே 'சார்ஸ' காப்புறைகளுடன் மருத்துவத் தாதிகள். கனடாவில் 'சார்ஸ்' தீவிரமாக ஆபத்து ஏற்படுவது தெரிந்ததே.

# 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலத்தின் செவ்வாய்ப் பயணம் ஆரம்பமானது!

## ஆறு மாதங்களுக்குப் பின்பே இலக்கை அடையும்

(மொஸ்கோ)

செவ்வாய்க் கிரகத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்திருக்கும் 'பீகிள் 2' என்ற தரையிறங்கும் கலத்தைக்கொண்ட 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம்- ரஷ்யாவின் சோயுஸ் - ∴பிறகட் விண்கலத்திலிருந்து திட்டமிட்டபடி தனது பயணத்தைத் தொடங்கியது.

ரஷ்யாவின் கஸகஸ்தானிலுள்ள பைகனூர் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட இவ்விண்கலம்- இன்னமும் ஆறு மாதங்களில் செவ்வாய்க்கிரகத்தைச் சென்றடையும்.

விண்கலத்தின் ஆரம்பம் மகிழ்ச்சியை தருவதாக- செவ்வாய்க்கான இந்தப் பயணத்தின் திட்டமிடலாளரும், ஐரோப்பிய விண்வெளி ஏஜென்ஸியின் தலைவருமான பேராசிரியர் டேவிட் செனத்வுட் கூறினார்.

'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' என்ற இந்த விண்கலப் பயணத்தின் நகர்வுகளை - ஜேர்மனியிலுள்ள - ஐரோப்பிய விண்வெளி நடவடிக்கைகளுக்கான மையமும் அவதானித்து வருவதோடு - விண்கலத்திலிருந்தான முதலாவது ரெலிமெற்றி வழியான செய்தியையும் அந்நிலையம் பெற்றிருக்கிறது.

'பீகிள் 2' என்ற தரையிறங்கும் கலம் - திட்டமிட்டபடி செவ்வாயில் இன்னமும் ஆறு மாதங்களில் தரையிறங்கித் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்குமானால்- செவ்வாயில் நீர்வளம் இருப்பதான செய்திகள் உறுதிப்படுத்தப்படக்கூடும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலமானது - 'பீகிள் 2' தரையிறங்கு கலத்தை செவ்வாயின் விண்பரப்பில் வைத்து - அதனைத் தரையிறக்கி விடும். அதன் பின்பே 'பீகிள் 2' வினது ஆய்வுப் பணிகள் ஆரம்பமாகும்.



'மார்ஸ் எக்ஸ்பிரஸ்'

# மயிலிட்டிக் கடக்கரையில கிடந்திட்டுவர ஏதாவது வழி கிடைக்குமோடா தம்பி...?

யாழ்.குடாநாட்டிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவிடாமல் தடுக்கப்பட்டிருப்பதால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி- குடாநாடு தழுவிய ரீதியில், மக்களை நேரடியாகச் சந்தித்து வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடம் - மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் தெரிவித்த உள்ளக்குமுறல் இது.

"தம்பி நான் சாகிறதுக்கிடையில ஊருக்கு போகலாமேடா" என்று கேட்டது ஒருவர் இருவர் அல்ல பாட்டி, தாத்தாக்களிடம் இருந்த ஒரேயொரு கேள்வி இதுதான்.

"மயிலிட்டியில போய் ஒருக்கா அந்தக் கடற்கரையில கிடந்திட்டு வாறளவுக்காவது ஏதாவது வழி செயவாங்களோடா" என்று கேட்டார் ஒரு பழுத்த கிழவரான தாத்தா.

இவ்வாறெல்லாம் ஊர் போக வேண்டும் என்ற கனவுகளோடு வாழும் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வு எப்போது மாறும்? ஆசைகள் எப்போது பூர்த்தியாகும்?

அந்த மக்கள் தம் ஊரின் அந்த நாள் நினைவுகளை எம்மோடு பகிர்ந்து கொண்டனர்.

"எங்கட ஊரிலை இருந்த நேரத்திலை நாங்கள் எவ்வளவு சந்தோசமாய் இருந்தம். அந்தக் காலத்தில ஊரிலை உள்ள சின்னஞ்சிறுசுகள் எல்லாம் தொழிலுக்குப் போங்கள். நல்ல வருமானம். பள்ளிக்கூடத்தால வந்து புத்தகத்தைப் போட்டிட்டு சாப்பிட்டு கடக்கரைக்குக் போனால் 50, 100, 150, 200 எண்டு காசோடதான் வருங்கள். ஒரே உழைப்பு.

வேலையில்லாத நேரத்தில கடக்கரையில விளையாடுங்கள். எங்களுக்கும் பொழுது போகாட்டி காட்ஸ் அல்லது தாயம் ஏதாவது விளையாடுவம்."

- இப்படி இவர்களின் ஊரின் இனிமையான நாட்களை நினைவு கூர்ந்த போது -

"முகாமில இருக்கிற எல்லாக் குடும்பமும் சில பொதுவான கஸ்டங்களை அனுபவிக்குதுகள். அது தண்ணிப் பிரச்சினை மற்றது மலசல கூடப் பிரச்சினை அதுகள்தான்..."

சிறிதுநேரம் யோசித்த பின் ஒரு பெருமூச்சோடு தொடர்ந்தார்.

"முகாமில சில சனம் ஓரளவு வசதியாய் இருக்கிதுகள். அது கொஞ்சம் நாகரிகமாய் வாழவேணும் எண்டு மோட்டாச் சைக்கிள், ரீ.வி. எண்டு கொஞ்சம் ஆடம்பரமாய் இருக்குதுகள். அது பிழையில்லை. ஆனால், மற்றக் குடும்பங்களுக்கு இது மனத்

அகதி வாழ்வின் பயங்கரமான வாழ்நிலையை எம் முன் எடுத்துக் கூறினார். "சின்ன வீட்டுக்கை இருக்கேக்கை ஒவ்வொரு நாளும் எங்கட இளம் பிள்ளையள் கன கஸ்டங்களை அனுபவிக்குதுகள். அதுகளுக்கு அது பெரிய மனக்கஸ்டமான விசயம். தம்பி உங்களுக்கு விளங்கும் தானே. உந்த பொதுக்கிணறு அதுகும் குழாய்க் கிணறு அதில குளிக்கிறது, உடுப்பு மாத்திறது" என்று சொல்லிக்கொண்டே போனார்.

அதனைவிட நெருக்கமான குடியிருப்புக்களில் வசித்து வருவ

மாக உள்ளன. இதனால், இவர்கள் மத்தியில் பாலியல் உணர்வுகள் தூண்டப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்படும் நிலை அதிகளவில் காணபபடுவதாகவும், அது தவிர்க்க முடியாததாகவும் உள்ளது. அதனால், பெற்றோர் பருவமடைந்த பெண்களுக்கு சிறு வயதில் திருமணம் செய்து வைக்கும் நிலை உள்ளது. இதனால், உடல் - உள ரீதியான பல தாக்கங்களை இந்த அகதி முகாம் வாழ்மக்கள் பெற்றுள்ளனர். இது வெளிப்பார்வைக்குத் தெரியாவிட்டாலும், எதிர்பாராத விதத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உண்மையே. ஆனால், இவர்கள் இவ்வாழ்க்கையை விட்டு தம் ஊர் போகும்போது மட்டுமே இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பதனை நாம் உணர்ந்து கொண்டோம். அப்போது

"தம்பி இண்டைக்கு எங்கட சின்னப் பெடியள் படிப்பும் ஒழுங்கில்லை. பொழுதுபோக்குச் சரியில்லை. படம் படம் எண்டு அலையுதுகள். என்ன செய்யிறது. அது - ஊரில இருந்தால்; பிள்ளைகள் தானாப் படிக்குங்கள். தொழில் செய்யுங்கள்" என்று தம் வாழ்வை எமக்கு எடுத்துக்காட்டினார் ஒருவர்.

அவலம் நிறைந்த அகதிமுகாம் வாழ்வு, வாழும் குடியிருப்பு வாழ்வு பற்றிக் குறிப்பிடும்போது -

தாக்கத்தைக் குடுக்குது. சிறுசுகள் சரியாய் மனம் பேதலிக்குதுகள்" என்ற அவரிடம் -

"வசதியானாக்கள் வேறை எங்கேயாவது போயிருக்கலாம்தானே" என்று கேட்டபோது -

"வாடகை வீட்டில இருக்கிறதை விட இது பறவாயில்லை" என்றார் விரக்தியாய் சிரித்தபடி.

மேலும், நாம் உரையாடியபோது- அவர், எவராலும் ஜீரணிக்க முடியாத ஆபத்து நிறைந்ததுமான தம்

தால் பாலியல் ரீதியிலும், பல பிரச்சினைகளை அவர் தனது மொழியில் எங்களுக்குக் கூறினார். அது மிகவும் ஆபத்தான நிலைக்கு எதிர்கால சந்ததியை இட்டுச் செல்வதை நாம் உணர்ந்து கொள்கிறோம். அதனால், அதனை நாம் வெளிப்படையாகக் கூறுகிறோம்.

பாலியல் ரீதியாக உடல் - உள வளர்ச்சியடையாத சிறுவர்கள், சிறுமியர் பாலியல் தொடர்புகளைக் காண்கின்ற சந்தர்ப்பங்கள் அதிக

ஒருவர் அங்கே விளையாடிக் கொணடிருந்த சிறுவர்களைக் காட்டி -

"தம்பி இஞ்ச இருக்கிற நேசறிக்கு ஒரு அடிப்படை வசதியும் இல்லை. ஊர்ப்பிள்ளை ஒருத்திதான் படிப்பிக்கிறாள். சம்பளம் கன காலம் குடுக்கேல. அதவிட அங்காலை எல்லாம் வடிவாச் சோடிச்சு விளையாட்டுச் சாமானுகள் வைச்சு வடிவா நேசறி நடக்குது. எங்கட முகாமில இப்படி இருக்கு" என்று கவலையுடன் கூறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உதவிகள் வழங்கும் உறுதிக்கு முன் மனித உரிமை காக்கும் ஒப்பந்தம்!

## சர்வதேச நாடுகள் எதிர்பார்க்கின்றனவாம்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில், மனித உரிமைகள் பேணும் ஒப்பந்தம் ஒன்றில், அரசும் - விடுதலைப் புலிகளும் ஒப்பமிடவேண்டும் என்று, உதவி வழங்கும் நாடுகள் எதிர்பார்க்கின்றன என்று, கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்தவாரம் - ஜப்பானில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னதாக, இவ்வாறான ஒப்பந்தத்தில் இருதரப்பும் கைச்சாத்திடவேண்டுமென்று அந்நாடுகள் எதிர்பார்ப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - வருடமொன்றுக்கு, இரண்டு கோடி ஐம்பது இலட்சம் ரூபா டொலர்கள் என்ற அடிப்படையில், ஆறு வருடங்களுக்கு வட - கிழக்குப் பகுதிகளுக்கு உதவி வழங்குவது என்று, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி உதவிகள் வழங்கப்பட வேண்டுமானால், விடுதலைப் புலிகள் உதவி வழங்கும மாநாட்டுக்குச் சமுகமளிப்பது மிகவும் அவசியம் என்றும், அந்த இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# சிறுமியை வல்லுறவுக்குட்படுத்த முற்பட்ட ஐந்துபேர் அகப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

சிறுமி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற ஐந்து பேரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவிலைச் சேர்ந்த மேற்படி சிறுமியை அதேயிடத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பலாத்காரமாக அழைத்துச் சென்று, பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்றுள்ளனர். அச்சமயம் சிறுமி கூச்சலிடவே, அயலவர்களினால் மேற்படி ஐவரும் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் - கொக்குவிலைச சேர்ந்த சீனிவாசன் சுதாகரன், தேவசுந்தரம் ரகுநாதன், சிவநாதன் நாகலிங்கம், சுப்பிரமணியம் முரளிதரன், கதிரவேலு பிரதீபன் ஆகிய ஐவரையுமே பொலிஸார் கைதுசெய்து, யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது - இவர்களை 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

## அரசாங்கம் உரிய பதிலை...

முடிந்துள்ளன.

எனினும், அப்பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதுவும் இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் அரசியல் யாப்புக்கு உட்பட்ட வகையில், வட-கிழக்குப் பகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. இந்த யாப்புக் காரணமாகவே எமது போராட்டம் தீவிரமடைந்தது.

இதனால் - அரசியல் யாப்புத் தொடர்பான விதிமுறைகளைத் தாண்டியே, அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது அரசு - இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு, அரசியல் யாப்பினைக் காரணங்காட்டி இடைக்கால நிர்வாகம் ஒன்றை முழுமையாக ஏற்படுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றது. இதனால், நாம் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

ரோக்கியோவில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு - இலங்கை அரசின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டதோடு, இலங்கையின் வெளிநாட்டு முதலீட்டை மேற்கொள்ளக் கூடிய சூழலை உருவாக்குவதற்குமே அதிகம் பயன்படப்போகின்றது.

இம்மாநாட்டில், எம்மையும் அழைத்துப் பங்குபற்ற வைப்பதன் மூலம்-வெளிநாட்டு முதலீடுகளுக்கும், இலங்கை அரசின் பொருளாதார மேம்பாட்டிற்கும், தொடர்ச்சியான உத்தரவாதத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அரசு கருதுகின்றது.

இதன் காரணமாகவே இலங்கை அரசிடமிருந்தும், சர்வதேச சமூகத்திடமிருந்தும் ரோக்கியோ மாநாட்டில்- எம்மைப் பங்குபற்ற வைப்பதற்கான இராஜதந்திர அழுத்தங்கள் தொடர்ச்சியாக எமக்குப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இது முற்று முழுதாக சுயநல நோக்கம் கொண்ட ஒரு முயற்சியேயாகும்.

ஆனால், எம்மைப்பொறுத்த வரையில், எமது தாயகப் பிரதேசமான வட - கிழக்குப் பகுதி யுத்தத்தினால் அழிவடைந்து கிடக்கின்றது, இப்பிரதேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு-சுயமாகச் செயற்படக்கூடிய அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறான இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டாலேயே வட-கிழக்குப் பகுதியைக் கட்டியெழுப்ப முடியும். எனவேதான், நாம் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறோம்.

நாம் நீண்ட காலமாக பல தடவைகள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம். ஆனால், தொடர்ந்தும் ஏமாறத் தயாராக இல்லை. இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக - இலங்கை அரசு இதுவரை எமக்கு எந்தவித உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை.

எனினும், ரோக்கியோ மாநாட்டுக்கு எம்மைப் பங்குபற்றச் செய்வதற்கு - இறுதி நேரம்வரை இலங்கை அரசும், சர்வதேச நாடுகள் சிலவும் அழுத்தம் பிரயோகித்து வருகின்றன என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

## ரணிலின்...

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் சந்திக்க முயற்சிப்பார் என, ஹக்கீமுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்.முக்கிய...

படி விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 11.00 மணியளவில், கிளிநொச்சி அரசியற்துறை அலுவலகத்தில் ஆரம்பமான இக்கூட்டம், மாலை 3.00 மணிவரை நீடித்தது.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோரும், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தொண்டா, ஹக்கீம் ஆதரவின்றியே ஜே.வி.பி.யுடன் ஆட்சியமைப்போம்!

## அநுரா பண்டாரநாயக்க கொழும்பில் தெரிவிப்பு

அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமான் அல்லது ரவூப் ஹக்கீம் ஆகியோரது ஆதரவில்லாது, புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று - நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யுடன் கூட்டணி ஏற்படுவதன் மூலம், இந்த நோக்கத்தை அடையமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

தென்மாகாணசபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித்தின் கொலை தொடர்பாக எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் - கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஜே.வி.பி.யினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஏற்பாடுசெய்த ஆர்ப்பாட்ட நிகழ்வில் அநுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி - ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க இருக்கின்றார் என்றும், அவர் கூறினார்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் - பேர்ட்டி பிரேமலால் திஸநாயக்க, மங்கள சமரவீர, விமல் வீரவன்ச ஆகியோரும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

## புலிகள்...

டனும் நான் பேசியுள்ளேன். ஆனால், இதற்குப் புலிகளுடனும் நாம் கலந்துரையாடவேண்டும்.

அரசியலமைப்பை உடனடியாக மாற்றி, புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தைத் தருவது சாத்தியப்பாடானதல்ல. எனவே - இறுதித் தீர்வு நோக்கிய பேச்சுக்களின் மூலமாக அரசியல் அமைப்பின் மாற்றம் பற்றி நாம் சிந்திக்கவேண்டியுள்ளது.

இதுபற்றி ரோக்கியோ மாநாடு முடிந்ததும் நாம் புலிகளுடன் பேசலாம். விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு என்றார் பீரிஸ்.

(200)

# சட்ட, பொறியியல் பீடங்கள் யாழில் ஆரம்பிக்க மும்முரம்!

## மானிய ஆணைக்குழுவிடமும் அனுமதி கோரப்படுகின்றது

யாழ்.பல்கலைக்கழகத்தில் - சட்டம் மற்றும் பொறியியல் பீடங்களை ஆரம்பிப்பது குறித்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக உரிய ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி இரு பீடங்களையும் ஆரம்பிப்பதற்கான அனுமதியை ஏற்கனவே யாழ்.பல்கலைக்கழகத்தின் பேரவை, மூதவை ஆகியவை வழங்கியுள்ளன.

இதனைத் தொடர்ந்து - மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கு, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் அனுமதி கிடைத்ததும், உடனடியாக இரு பீடங்களுக்கான கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

(க)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.

**வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1) கேள்விப் பத்திரங்கள் 18.06.2003ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2) கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு, அரக்கு முத்திரை வைத்து செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 20.06.2003 முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
3) கேள்விகள் 20.06.2003 நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்.
4) மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

| தொ. இல. | வேலைவிபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | கவுந்தில் வீதி புனரமைத்தல் | ரூ.5,000/= | ரூ.250/= | ரூ.50/= |
| 02 | பண்டகைப் பிள்ளையார் வீதி புனரமைத்தல் | ரூ.4,000/= | ரூ.250/= | ரூ.50/= |
| 03. | 2 ஆவது படை தார் ஊற்றுதல் 16 வீதிகள் 1403.5 சதுரம் | ரூ.5,000/= | ரூ.250/= | ரூ.50/= |

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,
02.06.2003

சி.பசுபதி,
செயலாளர்.

**நேர மாற்றம்**

**இறை தியான வழிபாடுகள்**

குருநகர்
புனித யாகப்பர் ஆலயத்தில்
5 ஆம் திகதி வியாழன், 6 ஆம் திகதி வெள்ளி
பி.ப.2.30 மணிமுதல் 5.30 மணிவரை
7 ஆம் திகதி சனி - காலை 9.30 முதல் பி.ப. 1.00 மணிவரை

சனி இரவு 8 மணிமுதல் அதிகாலை வரை
புனித மாட்டீனார் குருமட மைதானத்தில்
**தூய ஆவி திருவிழிப்பு**

ஆயர் இல்லம். (சி-1041) இறை தியான குழுவினர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 97.00 | 97.40 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.52 | 159.70 |
| 1 யூரோ | 113.60 | 114.22 |
| 1 சுவிஸ் பிராங் | 74.28 | 75.50 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.59 | 63.54 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.25 | 25.95 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.